வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
விராமலர்

Email : news@eelanadu.lk
மலர் : 06
30.03.2025 ஞாயிற்றுக்கிழமை
இதழ் : 91
பக்கங்கள் : 16


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# வதைமுகாம்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்துவோம்!

## வவுனியாவில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க

வவுனியா, மார்ச் 30

**பட்டலந்த வதை முகாம் மட்டுமல்ல பல வதை முகாம்கள் இருந்தன. அவை தொடர்பில் விசாரணைகள் இடம்பெறும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.**



வவுனியா, குடியிருப்பு பகுதியில் நேற்று தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களைச் சந்தித்து கலந்துரையாடிய பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மூன்று வருடத்திற்கு முன்னர் நடத்தவேண்டிய இந்த தேர்தலை நாம் ஆட்சிக்கு வந்தவுடனேயே நடத்துகின்றோம். அரசாங்கம் ஒவ்வொரு செயற்பாடுகளையும் கட்டம் கட்டமாக செய்து வருகின்றது.

அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும். ஆனால் அதனை உடனடியாகச் செய்ய முடியாது.

நாம் ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள் தான் ஆகியுள்ளது. ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் இருந்தாலும் அதனை படிப்படியாக அதற்கான செயன்முறைகள் ஊடாகத்தான்

15

## சுன்னாகத்தில் விபத்து; 19 வயது இளைஞன் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 30

சுன்னாகம் - கந்தரோடை, பழனி கோவிலடிப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சிவராசா பிரவீன் (வயது 19) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் செலுத்தி வந்த மோட்டார் சைக் கிள் இன்னொரு மோட்டார் சைக்கிளுடன்

15

## அரிசி பற்றாக்குறை செயற்கையானது!

### அமைச்சர் வசந்த சமரசிங்க

கொழும்பு, மார்ச் 30

சந்தையில் அரிசி பற்றாக்குறையை செயற்கையாக உருவாக்கி அரிசி விலையை சிலர் அதிகரிப்பதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க குற்றம்சாட்டியுள்ளார்.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு ஆலை உரிமையாளர்கள் அரிசியின் விலையை அதிகரித்து நுகர்வோருக்கு விற்பனை செய்வதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக நெல் அறுவடை எதிர்பார்த்த அளவைவிட குறைவடைந்துள்ளதாக

15

## மோடியின் இலங்கைப் பயணத்தின்போது பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம்!

### இந்திய ஊடகங்கள் தகவல்

புதுடில்லி, மார்ச் 30

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின்போது பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான கட்டமைப்பு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது 1987ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையின் தலையீட்டுக்கு பின்னர் கைச்சாத்திடப்படும் முதலாவது பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தமாகும் என இந்திய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கும்

15

## புதிய அரசமைப்புப் பணி ஊடாக பிரிட்டனுக்கு பதில் வழங்குங்கள்!

### அரசுக்கு மனோ கணேசன் ஆலோசனை



கொழும்பு, மார்ச் 30

உடனடியாக புதிய அரசியலமைப்புப் பணியினை ஆரம்பித்து தேசிய நல்லிணக்க இலங்கை அடையுங்கள். அதுதான் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு நீங்கள் தரக்கூடிய சரியான பதிலாக இருக்க முடியும் என தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் மனோ கணேசன் தெரிவித்ததாவது-

15

## இலங்கையிலும் மிகப்பெரும் நில நடுக்கம் ஏற்படக்கூடும்!

### நாகமுத்து பிரதீபராஜா எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 30



மியன்மாரில் நடந்தது போன்று என்றோ ஒரு நாள் இலங்கையிலும் மிகப்பெரிய அளவிலான நில நடுக்க நிகழ்வு இடம்பெறலாம். அதற்கேற்றவகையில் போதுமான நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல்துறை தலைவர் கலாநிதி நாகமுத்து

15

## பிரித்தானியா விதித்த தடையின் பின்னணியில் புலி ஆதரவாளர்கள்

### அஜித் பெரேரா எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 30

முன்னாள் இராணுவத் தலைமை அதிகாரிகள் உட்பட நால்வருக்கு பிரித்தானிய அரசாங்கம் தடை விதித்தமையின் பின்னணியில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சக்திகள் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின் போதே பாராளுமன்ற உறுப்பினர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தலைமை

15



## புனர்வாழ்வு நிலையத்தில் இளைஞன் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 30

மினுவாங்கொடை, பென்சில்கொடை பிரதேசத்தில் உள்ள தனியார் போதைப்பொருள் மறுவாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று வந்த

15

## உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குகள் நிராகரிக்கப்படும் சந்தர்ப்பம் குறைவு!

### மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் விளக்கம்

கொழும்பு, மார்ச் 30

தமிழர் பகுதிகளில் மாத்திரமின்றி நாடு தழுவிய ரீதியில் பரவலாக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தலின் போது வாக்குகள் நிராகரிக்கப்படும் சந்தர்ப்பம் குறைவாகவே உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அவர் மேலும்

15

## அநுரவின் இந்திய விஜயத்தின்போது எட்டப்பட்ட இணக்கப்பாடுகளை மீளாய்வு செய்வார் மோடி!

### இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 30

இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் இந்திய விஜயத்தின் போது இணக்கப்பாடு எட்டப்பட்ட ஒத்துழைப்பு மேம்பாட்டு திட்டங்கள் குறித்து மீளாய்வு செய்யவுள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பை ஏற்று ஏப்ரல் 4 - 6 வரை பிரதமர் மோடி இலங்கை வரவுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி அநுராதபுரத்திற்குச் சென்று புனித ஸ்ரீமகா

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் பிரச்னையை அரசியலாக்க கூடாது

## இந்திய அரசியல்வாதிகளிடம் இளங்குமரன் எம்.பி. கோரிக்கை



**யாழ்ப்பாணம், மார்ச் 30**

**இந்திய - இலங்கை மீனவர் பிரச்னையை இந்திய அரசியல்வாதிகள் அரசியலாக்கக் கூடாது என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தெரிவித்தார்.**

இந்திய மீனவ பிரதிநிதிகள், இளங்குமரன் எம். பியை நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் காரியாலயத்தில் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.


இதன்போது, இரு நாட்டு மீனவர் பிரச்னைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

எல்லை தாண்டி மீன்பிடிப்பதை நிறுத்துவதற்கு தாங்கள் நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாக இந்திய மீனவ பிரதிநிதிகள் தனக்கு தெரிவித்ததாக இளங்குமரன் எம். பி. கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் கடல் வளத்தைப் பாதுகாக்கும் அதேநோக்கில், இந்தியாவின் கடல் வளத்தையும் பாதுகாக்க வேண்டும். இந்திய அரசியல்வாதிகள் இரு நாட்டு மீனவர் பிரச்னைகளை அரசியல் மயப்படுத்த முற்படுகின்றனர். எனவே, இந்திய அரசியல்வாதிகள் இந்திய மீனவர்களின் பக்கம் நின்று அந்த மீனவர்களுக்கு உரிய முறையிலான திட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அவ்வாறு அவர்கள் திட்டம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கும் பட்சத்தில் இலங்கையின் எல்லைக்குள் அவர்கள் வர மாட்டார்கள். எங்களின் கடல் வளமும், மீனவர்களின் வாழ்வாதாரமும் முன்னேற்றகரமாக அமையும். எனவே, மீனவர் பிரச்னை தொடர்பில் வெகு விரைவில் எங்களது கடற்றொழில் அமைச்சருடன் கலந்துரையாடி இராஜதந்திர மட்டத்திலான பேச்சுகள் மூலம் ஒரு சுமூகமான தீர்வை பெற்றுக் கொள்ள முடியும்- என்றார். (எ-05)



வீதியால் பயணித்த பெண்ணின்

# தங்கச் சங்கிலியை அறுத்த இருவர் பொலிஸாரால் கைது

கிளிநொச்சி, மார்ச் 30

வீதியால் பயணித்த பெண்ணிடம் தங்கச் சங்கிலியை அபகரித்த சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ - 35 பிரதான வீதி ஊடாக பரந்தன் பகுதியில் அமைந்துள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணை பின் தொடர்ந்து சென்ற இருவர், குறித்த பெண் அணிந்திருந்த மூன்று இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய விரைவாக செயல்பட்ட பொலிஸார் சந்தேக நபர்களை துரத்திச் சென்று இராமநாதபுரம் பகுதியில் வைத்து இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து, பெண்ணிடம் அபகரிக்கப்பட்ட தங்கச் சங்கிலி மற்றும் அவர்களின் உடைமையில் இருந்து போதைப் பொருட்களும், திருட்டில் ஈடுபடுவதற்காக பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

அத்துடன் தடயப் பொருட்கள் மற்றும் சந்தேக நபர்களை நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்திய போது, மேலதிக விசாரணைகளுக்காக இரண்டு சந்தேக நபர்களையும் மீண்டும் தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ)

# பொலிஸார் அடாவடியா? நடவடிக்கை எடுப்போம்

## பவானந்தராஜா எம். பி. சொல்கிறார்



யாழ்ப்பாணம், மார்ச் 30

பொலிஸாரின் அராஜகங்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்போம் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சங்கானை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். "அண்மைக் காலமாக பொலிஸாரின் அடாவடிகள் அதிகரித்துள்ளன. கடந்த சில தினங்களுக்கு முன்னர் கூட பொலிஸார் நெல்லியடியில் ஒரு வீட்டுக்குள் நுழைந்து அடாவடியில் ஈடுபடுகின்ற காணொலி வெளியாகியிருந்தது. இதற்கு எதிராக நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கின்றீர்கள்" என கேள்வி எழுப்பிய போது,

"பொலிஸாருக்கு போதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இருந்தாலும், பொலிஸார் சில இடங்களில் தாங்கள் நினைத்தபடிதான் நடந்து கொண்டிருக்கின்றனர். அவர்களது செயல்பாடுகள் பிழையாக இருந்தால் அந்த பொலிஸாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம்" - என்று பதிலளித்தார். (எ-05)


# தலைமன்னார் கடலில் மிதந்து வந்த பெருமளவு கேரள கஞ்சா பொதிகள்!

தலைமன்னார், மார்ச் 30

தலைமன்னார் மணல் திட்டு 1 மற்றும் 2 இற்கு இடைப்பட்ட கடற்பரப்பில் மிதந்து கொண்டிருந்த சுமார் 124 கிலோ 392 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா பொதிகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படையினரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இந்தக் கேரளக் கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

வட மத்திய கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல், தம்மென்னாவுடன் இணைக்கப்பட்ட சிறப்பு கப்பல் ரோந்துக் குழுவை நிலைநிறுத்தி நேற்று முன்தினம் விசேட சோதனை நடிவடிக்கையை மேற்கொண்டது.



இதன்போது, கடலில் சந்தேகத்துக்கிடமான முறையில் மிதந்து கொண்டிருந்த 46 பொதிகளை அவதானித்து அவற்றைச் சோதனை செய்து பார்த்தபோதே இந்த கேரளக் கஞ்சாப் பொதிகள் சிக்கின.

கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவின் மொத்த மதிப்பு 49 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமாக இருக்கும் என கடற்படையினர் தெரிவித்தனர்.

மேலும், கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா பொதிகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன. (எ)

# மாணவியை தண்டித்த ஆசிரியருக்கு பிணை!

யாழ்ப்பாணம், மார்ச் 30

தரம் - 05 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவரை தண்டித்த விவகாரம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஆசிரியர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவியின் செயல்பாடு காரணமாக அவரை நல்வழிப்படுத்தும் வகையில் தண்டித்த ஆசிரியருக்கு எதிராக மாணவின் தாயாரால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட ஆசிரியர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், பருத்தித்துறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டதன் பின்னர் பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டார்.

இதையடுத்து குறித்த ஆசிரியரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பருத்தித்துறை பொலிஸார் முற்படுத்தியிருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் நீதிமன்ற நீதிவான் பொ. கிருஷ்ராந்தன், குறித்த ஆசிரியரை ஓர் ஆள் பிணையில் விடுவித்து உத்தரவிட்டதுடன் வழக்கு விசாரணையை எதிர்வரும் டிசெம்பர் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (எ)

# வடமராட்சியில் குடும்பஸ்தர்மீது வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், மார்ச் 30

வடமராட்சி கிழக்கு ஆழியவளை பகுதியில் குடும்பஸ்தர்மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் குறித்த குடும்பஸ்தரின் வீட்டுக்குள் அத்துமீறி உள் நுழைந்த அதே பகுதியைச் சேர்ந்த சிலர், அங்கிருந்த உடைமைகளைச் சேதப்படுத்தியதுடன் குடும்பஸ்தர் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர் மருதங்கேணி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இது தொடர்பில் மருதங்கேணி பொலிஸாருக்கு மருத்துவமனை பொலிஸாரால் முறைப்பாடளிக்கப்பட்டதன் பிரகாரம் மருதங்கேணி பொலிஸார் பருத்தித்துறை ஆதார மருத்துமனைக்கு சென்று தாக்குதலுக்கு உள்ளாகியவரிடம் வாக்குமூலம் பெற்றதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








ஆனையிறவு உப்பு உற்பத்தி தொழிற்சாலையில், மேசை உப்பு உற்பத்தியை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்: - கஜிந்தன்)

# பிரதமர் மோடியை எதிர்கொள்ள தயங்குகிறது அநுர அரசாங்கம்!

## சம்பூர் மின் உற்பத்தி நிலையத்தை திறக்க ஜனாதிபதி செல்வாரா என்பது சந்தேகம்?

கொழும்பு, மார்ச் 30

இந்திய எதிர்ப்புக் கொள்கையிலிருந்த மக்கள் விடுதலை முன்னணிக்கு (ஜே. வி. பி.) இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை பயணத்தின் போது அவரை எவ்வாறு எதிர்கொள்வது என்பதே தற்போது பெரும் நெருக்கடியாகவுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இந்தியாவுடனான நட்புறவை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்கு பதிலாக ஆணவப் பேச்சுகளால் அதனை சீர்குலைக்கும் வகையிலேயே அநுர அரசாங்கம் செயல்படுவதாகவும் அவர் கூறினார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரத்தால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொருளாதார மாநாடொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், 2044 இல் 30 ட்ரில்லியன் டொலர்கள் பொருளாதாரத்தை அடைவதே இந்தியாவின் இலக்காகும். உலகில் மிக வேகமான பொருளாதார வளர்ச்சியைக் கொண்ட நாடு இந்தியாவாகும். எமக்கு அவ்வாறான இந்தியாவுடன் பலமான பாலமொன்றை அமைத்துக் கொள்ள முடியாது போயுள்ளது. இந்தியாவுடன் மாத்திரமின்றி ஏனைய நாடுகளுடனும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்த வேண்டும்.

இந்திய எதிர்ப்புக் கொள்கையிலிருந்தவர்கள், இந்தியாவுக்கு எதிராக மனிதப் படுகொலைகளைச் செய்தவர்கள் தற்போது பெரும் நெருக்கடிக் குள்ளாகி யிருக்கின்றனர்.

இந்தியப் பிரதமர் மோடி, இலங்கை வரும் போது அவருடன் சென்று எவ்வாறு சம்பூர் மின் உற்பத்தி நிலையத்தை திறந்து வைப்பது என்பதே அவர்களுக்குள்ள தற்போதைய பிரச்னையாகும்.

சில சந்தர்ப்பங்களில் சம்பூருக்கு செல்லாமலும் விடலாம். அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல் என்ன என்பது எமக்குத் தெரியாது. பொருளாதார ரீதியிலான இராஜதந்திர உறவுகளிலிருந்து விலகி, ஆணவம் கொண்ட பேச்சுகளால் தற்போது இந்தியாவுடனுள்ள நட்புறவையும் பகைத்துக் கொள்ளும் செயல்பாடுகளையே அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. மூடிய பொருளாதாரம் கொண்ட சிறிய நாடுகளால் அபிவிருத்தியடைய முடியாது.

இந்தியாவின் தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் கூட ட்ரில்லியனுக்கும் அதிக பொருளாதாரத்தைக் கொண்டுள்ளன. எமக்கு மிகவும் அண்மையிலுள்ள தென்னிந்திய மாநிலங்களே இவ்வாறு பெரும் பொருளாதாரத்தைக் கொண்டுள்ளன. எனவே, இவற்றிடமிருந்து நாம் பொருளாதார ரீதியில் பயன்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்- என்றார். (எ)

# வடக்கில் தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

## மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 30



ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தை மீள ஆரம்பித்த தைப்போன்று வடக்கில் போர் காரணமாக மூடப்பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பிப் பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதன் ஊடாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளையோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வடக்கின் பங்களிப்பும் அதிகரிக்கும் என வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

ஆனையிறவு உப்பு உற்பத்தி தொழிற்சாலையில், மேசை உப்பு உற்பத்தியை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், “வடக்கு மாகாணத்து இளையோருக்கு வேலை வாய்ப்பை வழங்கிய பல தொழிற்சாலைகள் போரினால் மூடப்பட்டுள்ளன. இதனால், வேலைவாய்ப்பின்மை எமது மாகாணத்தில் பெரும் பிரச்னையாக மாறியுள்ளது.

அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் ஆனையிறவு உப்பு தொழிற்சாலையை மீள முழு வீச்சில் இயக்க ஆரம்பித்திருக்கின்றது. ஆனையிறவு உப்புக்கு தனித்துவமான மதிப்பு இருக்கின்றது. அந்த வகையில் இதை மீளச் செயல்படுத்துவதானது சிறப்பானது. எதிர்காலத்தில் ஆனையிறவு உப்பை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் ஊடாக எமது மாகாணம் மேலும் வளர்ச்சிப்பாதையில் பயணிக்கும்”- என்றார். (எ-05)

# 3 மாதத்தில் 6 இலட்சத்து 84,960 சுற்றுலாப் பயணிகள் வருகை

கொழும்பு, மார்ச் 30

ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து இம்மாதம் 26 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 6 இலட்சத்து 84 ஆயிரத்து 960 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதில், அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 111,982 ஆக காணப்படுகின்றது.

மேலும், ரஷ்யாவிலிருந்து 90255, ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து 64711, ஜேர்மனியிலிருந்து 48129, சீனா விலிருந்து 37268, பிரான் ஸிலிருந்து 41449, அவுஸ்திரேலியாவிலிருந்து 25513 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

# செல்லப்பா சுவாமிகளின் 110ஆவது குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்ப்பாணம், நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 110 ஆவது

குருபூசை நிகழ்வு, நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 09.00 மணிக்கு சுவாமிகளுக்கு அபிஷேகம் நடைபெற்று, தொடர்ந்து திருமுறை மற்றும் நற்சிந்தனைப் பாடல்கள் இசைக்கப்படவுள்ளன.

அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ)

# தென்னக்கோனுக்கு உதவிய பொலிஸ் உட்பட இருவர் கைது

கொழும்பு, மார்ச் 30


முன்னாள் பொலிஸ் மா அதிபர் தென்னக்கோன் பொலிஸாரிடமிருந்து தலைமறைவாக இருப்பதற்கு உதவி செய்ததாக கூறப்படும் பாதுகாப்புப் பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட இருவர் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2023 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி மாத்தறை, வெலிகம பெலேன பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தென்னக்கோனை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

தென்னக்கோன் நீதிமன்ற உத்தரவை அவமதித்து சுமார் 20 நாட்கள் தலைமறைவாக இருந்த நிலையில், கடந்த 19 ஆம் திகதி புதன்கிழமை காலை மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தென்னக்கோன் தலைமறைவாக இருப்பதற்கு உதவி செய்த குற்றச்சாட்டில் சந்தேக நபர்கள் இருவரும் நேற்றுக்காலை கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)










தேசிய கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், கோண்டாவில் இந்துக் கல்லூரியில் முன்னெடுக்கப்பட்டு வரும் 24 ஆவது புத்தக அரங்க விழாவின் முதல் நாள் - நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற நிகழ்வின் காட்சிகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையில்லா பட்டதாரிகளை வேடிக்கையாக பார்க்கும் அரசு

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் சாடல்

மாத்தறை, மார்ச் 30

**வேலையில்லாப் பட்டதாரிகளை அரசாங்கம் வேடிக்கையாகவே பார்க்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சாடியுள்ளார்.**



கடந்த காலங்களில், எமது நாட்டின் சுகாதாரத் துறையில் மருந்துப்பொருட்கள் மோசடி, திருட்டு போன்ற கடுமையான சிக்கல் நிலைகள் காணப்பட்டன. தரம் குறைந்த மருந்துகளால் பலரின் உயிர்கள் பறிபோயின. இன்றும் கடுமையான மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கு அரசாங்கத்திடம் தீர்வில்லை. இதற்கான ஏற்பாடுகளைக் கூட காண்பதற்கில்லை. ஆஸ்துமா நோயாளிகளின் உயிரைக் காப்பாற்றும் மருந்து, நுரையீரல் தொற்றுக்கு வழங்கப்படும் மருந்து, நிமோனியா நோயாளிகளுக்கு வழங்கப்படும் ஆன்டிபயாடிக் மருந்துகள், தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள நோயாளிகளுக்கும் பக்றீரியா தொற்றுக்கான நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவுகின்றன. ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் மக்கள் ஆணையை வழங்கி, 225 பேரில் 159 பேரோடு பெரும்பான்மை அதிகாரத்தை வழங்கியது இவ்வாறான மருந்துகளுக்குத் தட்டுப்பாடுகளை ஏற்படுத் துவதற்கல்ல எனவும் சஜித் தெரிவித்தார்.

மக்களின் உயிரைக் காப்பாற் றும் மருந்துப் பொருட்களுக்கு இவ்வாறு கடும் தட்டுப்பாடு நிலவி வரும் இவ்வேளையில், அரசாங்கமானது இது தொடர்பில் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. வளமான நாட்டை உருவாக்குவோம் என்று கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்தனர். ஆனால், நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகளைக்கூட பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. நாட்டை ஆள்வதற்கான தொலைநோக்குப் பார்வையோ, வேலைத்திட்டமோ, பாதை வரைபடமோ இந்த அரசாங்கத்திடம் இல்லை. நாட்டை நிர்வகிக்க முடியாத, இயலுமையற்ற அரசாங்கமே நாட்டில் காணப்படுகின்றது எனவும் கூறினார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தறை மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் சஜித் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச வேலை கேட்கும் போது அமைச்சர்கள் வேலையில்லாப் பட்டதாரிகளை கேலி செய்கின்றனர். தற்போதைய அரசாங்கத்தின் வெற்றிக்கு உதவிய வேலையற்ற பட்டதாரிகள் இறுதியில் மருத்துவமனை செல்லும் அளவுக்கு அரசாங்கம் அடாவடித்தனத்தில் ஈடுபடுகிறது - என்றார். (எ)

# பிரிவினைவாதிகளின் நிகழ்ச்சி நிரலில் அரசு

## சாகர காரியவசம் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 30



இலங்கை இராணுவத்தை சர்வதேச அரங்கில் குற்றவாளிகளாக்கும் பிரிவினைவாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு சார்பாகவே அநுர அரசாங்கம் செயல்படுகிறது. பிரித்தானிய அரசாங்கம் இலங்கை இராணுவத்தின் முன்னாள் பிரதானிகளுக்கு விதித்த தடையை வன்மையாக கண்டிக்கும் துணிவு அரசாங்கத்துக்கு கிடையாது. எதிர்வரும் காலங்களிலும் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் மீறல் மற்றும் யுத்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பிரித்தானிய அரசாங்கம் முன்னாள் இராணுவத் தளபதிகளான சவேந்திர சில்வா, ஜகத் ஜெயசூரிய மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட ஆகியோருக்கு எதிராகத் தடை விதித்துள்ளது.

அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காகவே இலங்கை இராணுவத்தினர் சர்வதேச அரங்கில் தொடர்ச்சியாக நெருக்கடிக்குள்ளாக் கப்படுகிறார்கள். நல்லாட்சி அரசாங்கமே இதற்கான ஆரம்பத்தை ஏற்படுத்தியது என்றும் அவர் கூறினார். (எ)

# தரமற்ற மருந்துகள் கொள்வனவுக்கு கெஹலியவே பரிந்துரை செய்தார்!

கொழும்பு, மார்ச் 30

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் ஆலோசனையின் பேரில்தான், மருந்துகளை கொள்வனவு செய்ய இந்திய மருந்து நிறுவனத்தின் பெயர் பரிந்துரைக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் அதிகாரிகள், பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழுவின் முன் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட சுகாதார அதிகாரிகள் நேற்று முன்தினம் விசாரணைக்காக அழைக்கப்பட்டபோது இந்த தகவல் தெரியவந்தது.

அந்த மருந்துகளுக்கு செவெரிட் நிறுவனத்தைச் சேர்க்க செயலாளர் அறிவுறுத்தியதாகவும், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல செயலாளருக்கு அறிவுறுத்தியதாகவும் அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சிறீ சந்திரகுப்தா, முன்னாள் அமைச்சர் கெஹலியவிடம் முகவர் தொடர்பில் ஒரு முன்மொழிவை முன்வைத்ததாக தெரிவித்தார்.

இதன்போது, 151 மருந்துகளும் 5278 அறுவை சிகிச்சை கருவிகளும் பற்றாக்குறையாக இருப்பதாக தகவல் உள்ளதா? என்று கோப் குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர கேள்வி எழுப்பினார். இதற்கு அதிகாரிகள் தரப்பிலிருந்து எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை. (எ)

# ஏ. எல். பெறுபேறு குறித்து குழப்பமடைய வேண்டாம்

கொழும்பு, மார்ச் 30

2024 ஆம் ஆண்டுக்கான க. பொ. த. உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறுகள் குறித்து மாணவர்கள் குழப்பமடைய வேண்டாம் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்ட விசேட அறிக்கையின் படி, க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்பில் அண்மைக் காலமாக பல தகவல்கள் பரவி வருகின்றன.

ஆனால், க. பொ. த. உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் இதுவரை எந்தவோர் அதிகாரபூர்வ அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

எனவே, சமூக ஊடகங்களில் பகிரப்படும் போலியான தகவல்களால் மாணவர்கள் குழப்பமடைய வேண்டாமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# உலக வங்கியின் பிரதிநிதிகள் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு



திருகோணமலை, மார்ச் 30

கிழக்கு மாகாண ஆளுநருக்கும் உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில், கிழக்கு மாகாணத்தில் பொருளாதார மேம்பாட்டுக்காக உலக வங்கியால் செயல்படுத்தப்படக் கூடிய சாத்தியமான திட்டப் பகுதிகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. சுற்றுலாத் துறை, விவசாயம், மீன்பிடி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தல் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (எ)

# மாத்தளையில் வதைகூடங்கள்! கோட்டாபய மீது குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 30

1988, 1989ஆம் ஆண்டு கலவர காலப்பகுதியில் மாத்தளை மாவட்டத்தில் பலரை வலிந்து காணாமலாக்கிய பல்வேறு சம்பவங்களில், அப்போது மாவட்டத்துக்குப் பொறுப்பான இரா ணுவ ஒருங்கிணைப்பாளராக கடமையாற்றிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்புக் கூற வேண்டும் என்று காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் ஒன்றியம் புதிய குற்றச்சாட்டு முன்வைத்துள்ளது.

பட்டலந்த வதைகூடத்தை முன்னாள் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் சென்ற காலத்தில், மாத்தளையில் முன்னெடுக்கப்பட்டு வந்த சகல வதைகூடங்களையும் செயல்படுத்தியது - வழிநடத்தியது கோட்டாபய ராஜபக்ஷ ஆவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே இவ்வாறு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் காணாமலாக்கப்பட்ட வர்களின் குடும்ப ஒன்றியத்தின் செயலாளர் மரீன் நிலாஷானி கூறுகையில்,

“2012 ஆம் ஆண்டு மாத்தளை மாவட்ட மருத்துவமனையில் மனிதப் புதைகுழியொன்று கண்டிபிடிக்கப்பட்டது.

அது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட வைத்திய பரிசோதனைகளில், 1986 - 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இறந்தவர்களின் சடலங்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலேயே இது தொடர்பான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இது தொடர்பில் ஜனாதிபதி ஆணைக் குழுவொன்றை நியமித்து இதனை மூடிமறைத்து விட்டார்கள்.

1988, 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாத்தளை மாவட்டத்துக்குப் பொறுப்பான இரா ணுவ ஒருங்கிணைப்பு அதிகாரியாக கோட்டாபய ராஜபக்ஷ செயல்பட்டார்.

அவர் அங்கு கடமையாற்றிய காலப்பகுதியில் மாத்திரம் மாத்தளை மாவட்டத்தில் 720 வரையிலானவர்கள் பலவந்தமாக காணாமலாக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலப்பகுதியில் மாத்தளை மாவட்டத்திலிருந்த சகல பொலிஸ் நிலையங்களுக்கும், ஐந்து வருடங்களுக்கு மேல் பழைமையான சகலரது ஆவணங்களையும் நீக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, பட்டலந்த வதைகூடத்தை ரணில் முன்னெடுத்துச் சென்ற காலத்தில், மாத்தளையில் முன்னெடுக்கப்பட்டு வந்த சகலவதை கூடங்களையும் செயல்படுத்தியது - வழிநடத்தியது கோட்டாபய ராஜபக்ஷ ஆவார்” - என்று அவர் குற்றஞ்சாட்டினார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
30.03.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், பங்குனி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மோடியை சந்திக்கும் போது...!

இந்திய பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் நான்காம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அவருடைய பயண ஒழுங்கு வெளியாகியுள்ளது. முதலில் அவர் திருகோணமலைக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஊடகங்கள் செய்தியிட்டிருந்த போதிலும் கூட, அவரது உத்தியோகபூர்வ நிகழ்வுகள் தொடர்பாக வெளியாகியுள்ள ஊடக அறிக்கையில் குறித்த விஜயம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

அண்மையில் கிழக்கு மாகாணத்தை தளமாகக் கொண்டு செயல்படும், இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பு ஒன்றின் செயல்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்திருந்தது. குறித்த அமைப்பின் செயல்பாடுகள் கல்முனையில் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும், அது தொடர்பில் பாதுகாப்புத் தரப்புகள் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்திருந்தார்.

அதேவேளை ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் அறுகம் குடாவில் தங்கியிருந்த இஸ்ரேலியர்களை இலக்கு வைத்து தாக்குதல் செய்யும் திட்டமொன்று அடையாளம் காணப்பட்டிருந்ததுடன், சம்பந்தப்பட்டவர்கள் சிலர் பின்னர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவ்வாறான காரணங்கள் பிரதமர் மோடியின் கிழக்கு மாகாண விஜயத்தை தடுக்கும் காரணிகளாக தொழில்பட்டிருக்க அதிக வாய்ப்புண்டு.

இந்த விஜயத்தின் போது மோடி, அநுராதபுரத்துக்கும் விஜயம் செய்யவுள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் இந்திய பிரதமரும் இணைந்து அநுராதபுரத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர். இதன்போது ஜெயசிறீ மகாபோதி விகாரைக்கு இருவரும் இணைந்து விஜயம் செய்வதானது அரசியல் ரீதியில் குறிப்பான செய்தியை சொல்லுகின்றது.

மோடியின் விஜயத்தின் போது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார் - ஆனால், அவர் யாரை சந்திக்கவுள்ளார் என்னும் செய்தி வெளியாகாவிட்டாலும் கூட, அவர் தமிழ் அரசியல்வாதிகளையும் சந்திக்கவுள்ளார் என்னும் செய்திகள் உத்தியோகப்பற்றற்ற வகையில் வெளியாகியிருக்கின்றது. மோடி தமிழ் கட்சிகளின் தலைவர்களை சந்தித்தால், ஈழத்தமிழர் மீதான இந்தியாவின் கரிசனையில் அடிப்படையான மாற்றங்கள் எவையும் இல்லை என்பதை இலங்கை அரசாங்கத்திற்கு கூறுவதாக இருக்கும். அந்த ஒரே நோக்கித்திற்காகவே மோடி தமிழ் கட்சிகளை சந்திக்கலாம்.

மற்றும்படி, தற்போதுள்ள அரசியல் சூழலில் தமிழ் கட்சிகளை சந்திக்கக் கூடியளவுக்கு ஆற்றலுடன் தமிழர் அரசியல் இல்லை. - அது தவிர, இந்திய பிரதமரின் புதுடில்லிக்கான அழைப்பை அப்போது தமிழ் மக்களை அரசியல்ரீதியில் பிரதிநிதித்துவம் செய்யும் தலைவராக அடையாளம் காணப்பட்டிருந்த இரா.சம்பந்தன் எவ்வாறு கையாண்டார் என்பது தொடர்பில் 'ஈழநாடு' முன்னரும் அதன் விமர்சனங்களை முன்வைத்திருந்தது. சம்பந்தனின் சிறுபிள்ளைத்தனமான அணுகுமுறையின் போது, அதனை தவறு என்று கூறாதவர்களும், அதனை கண்டிக்காதவர்களும்தான், தற்போது மோடியை சந்திப்பதற்கான வாய்ப்பை எதிர்பார்த்திருக்கின்றனர்.

சம்பந்தனின் அன்றைய அணுகுமுறை உண்மையில் 149 கோடிக்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டிருக்கும், உலகின் பிரதான சக்தியான பாரதத்தின் பிரதமரை அவதிக்கும் செயலாகவே நோக்க வேண்டும். மோடியை சந்திக்கும் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் அன்றைய சம்பந்தனின் தவறுக்காக மன்னிப்பை கோர வேண்டும் - ஏனெனில் சம்பந்தனின் தவறான, சிறுபிள்ளைத்தனமான அணுகுமுறைக்கு அன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்துத் தலைவர்களும் பொறுப்புடையவர்களாவர்.

# ஆனையிறவு உப்பு விரைவில் உலகம் எங்கும் விற்பனையாகும்

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

*கிளிநொச்சி, மார்ச் 30*

விரைவில் ஆனையிறவு உப்பு என்ற பெயரில் உலகம் எங்கும் உப்பு விற்பனையாகும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

ஆனையிறவு உப்பு உற்பத்தி தொழிற்சாலையில் மேசை உப்பு உற்பத்தியை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாள் உங்களுக்கும் எங்களுக்கும் ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் மகிழ்ச்சியான நாள். பல இன்னல்களைச் சந்தித்தாலும் எமது மண்ணின் வாசத்தை பரப்பியது ஆனையிறவு உப்புத்தான். பலரும் விரும்பிப் பயன்படுத்திய ஆனையிறவு மேசை உப்பு மீண்டும் உங்கள் கைகளுக்கு வரப்போகின்றது. ஆனையிறவு உப்புக்கு தனியான 'மவுசு' உண்டு. விரைவில் ஆனையிறவு உப்பு என்ற பெயரில் உலகம் எங்கும் உப்பு விற்பனையாகும்"- என்றார்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி கூறுகையில், "எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 5 மாதங்களில் இந்தத் தொழிற்சாலையைத் திறந்து வைத்திருக்கின்றோம். கடந்த காலங்களில் இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பை வேறு தரப்புக்கள் கொள்வனவு செய்து வெவ்வேறு பெயர்களில் விற்பனை செய்தார்கள். இப்போது, இங்கிருந்தே மக்களுக்கு உப்பை விற்பனை செய்யும் வகையில் நாம் மாற்றியமைத்துள்ளோம்"- என்றார்.

(எ-05)

# இஸ்ரேல் அரசுக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

*கொழும்பு, மார்ச் 30*

பலஸ்தீன மக்களுக்கு அவர்களின் சுதந்திர நாட்டை விடுவிக்குமாறும் அந்த நாட்டில் இடம்பெறும் கொலைகளை நிறுத்துமாறும் கோரி இஸ்ரேல் அரசுக்கு எதிராக அமைதியான ஆர்ப்பாட்டமொன்று கொழும்பில் இடம்பெற்றது.



நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையின் பின்னர் கொழும்பு 7 தெவட்டகஹ ஜும்ஆப் பள்ளிவாசல் அருகில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பிரதி சபாநாயகர் றிஸ்வி சாலிஹ் கலந்து கொர்ண்டு கருத்து தெரிவிக்கையில், பலஸ்தீன மக்களின் குழந்தைகள், தாய்மார்கள் கொன்று குவிக்கப்படுவதை தடுத்து நிறுத்தல் வேண்டும். இதற்காக இலங்கை உட்பட உலக நாடுகள் ஒன்றுபட்டு ஐ. நா. ஊடாக அமெரிக்கா, இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுத்தல் வேண்டும். இந்த நோன்பு மாதத்தில் அவர்கள் செய்யும் கொலை களை உடன் நிறுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.


இந்த ஆர்ப்பாட்டத்தை பலஸ்தீன சுதந்திர இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது. (எ)

# யாழ்ப்பாணத்தில் இன்று சிலோன் சிங்கர் தெரிவு

*யாழ்ப்பாணம், மார்ச் 30*

யாழ் இசைக் கலையகம் நடத்தும் மாபெரும் சிலோன் சிங்கர் தெரிவு - 2ஆம் சுற்று இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் ஆ. சுலக்ஷனும் சிறப்பு விருந்திராக யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. கிருஷ்ணகுமாரும் கௌரவ விருந்தினராக அருளானந்தம் தங்கம் அறக்கட்டளை ஸ்தாபகர் திருமதி அ.யேட்றீசம்மாவும் கலந்து கொள்வர். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரியும், அதிகாரமும்!

கலாநிதி என். பத்ரி



அதிகாரம் தனி மனிதனை வலிமையுள்ளவனாக மாற்றுகிறது. மக்களாட்சியில் ஒவ்வொரு தனி மனிதனும் உள்ளாட்சி நிர்வாகம், மாகாண மன்றம், நாடாளுமன்றம் ஆகிய இடங்களில் தன் நலனுக்கான குரல் ஒலிக்க வேண்டும் என்று விரும்புகிறான். அதற்காக தேர்தலில் தன் நலன் காப்பவர் என்று நம்புவருக்கு வாக்களித்து அனுப்புகிறான். இவர்களுக்குக் கொடுக்கப்படும் அதிகாரம் ஐந்து ஆண்டுகளுக்கு மட்டுமே. எனினும் இவர்களின் அதிகாரம் வலிமைமிக்கது.

மக்களால்தான் இவர்களுக்கு இந்த அதிகாரம், பதவி, பெருமை, பல்வேறு சலுகைகள், ஒய்வூதியம் போன்றவை கிடைக்கின்றன. தேர்தல் நேரங்களில் மட்டும் பொதுமக்களின் வீடு தேடி வரும் அவர்களை, அவர்கள் அதிகாரத்துக்கு வந்த பிறகு சந்திப்பது என்பது சாமானிய மக்களுக்கு சாத்தியப்படுவதில்லை.

மக்களுடைய பிரதிநிதியாக உள்ளாட்சி வார்ட் உறுப்பினர் பதவி முதல் அமைச்சர் பதவி வரை பல்வேறு பொறுப்புகளை வகிக்கும் இவர்களை தங்களுடைய நலனுக்காகப் பாடுபடுவார்கள் என மக்கள் திடமாக நம்புகிறார்கள். அவர்களைக் கொண்டுதான் மாகாண அரசும், மத்திய அரசும் அமைகின்றன. அவர்களால் மட்டுமே பொது மக்களின் வாழ்வில் நலத்தைக் கொண்டு வர முடியும்.

அதே போல், அரசு அதிகாரிகள் மத்திய, மாகாண தேர்வாணையங்கள் நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று பதவிகளுக்கு வருகிறார்கள். எனவே, அவர்கள் பொது வாழ்வில் நேர்மையாகவும், வெளிப்படையாகவும் பாரபட்சமின்றியும் நடந்து கொள்வார்கள் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பு.

பொதுமக்கள் நலன் சார்ந்த பணிகளுடன் தன் அலுவலகப் பணியாளர்கள் தவறு செய்யும்போது, அவர்களுக்குத் துணை போகாமல் அவர்களைத் திருத்தி செயல்பட வைப்பதும் இவர்களுடைய கடமையாகும்.

அதிகாரிகளைப் பொருத்தவரை ஓர் அலுவலகத்தில் தொடர்ந்து மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை மட்டுமே பணியாற்ற அனுமதிக்கப்படுகிறார்கள். அந்த கால வரையறைக்குள் அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு அரசின் நல திட்டங்களை அவர்களால் செயல்படுத்த முடியும்.

கிராம நிர்வாக அலுவலர்கள் முதல் மாவட்ட அதிகாரிகள் வரை இவ்வாறு பதவியின் மூலமாக அதிகாரத்தைப் பெறுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தம்முடைய நேரத்தை மக்கள் நலனுக்காகத் திட்டமிட்டு செயல்படுத்தும்போது கண்டிப்பாக சமுதாயத்தில் விரும்பத்தக்க மாற்றங்களைக் கொண்டு வரமுடியும்.

அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் கட்சி வேறுபாடுகளாலும் தனிப்பட்ட கொள்கைகளிலும் முரண்பட வாய்ப்புகள் உண்டு. எனினும், பொதுவெளியை அதற்கு பழி தீர்த்துக் கொள்ள பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. அவர்களுடைய மக்கள் நலன் சார்ந்த பணிகளில் சுணக்கம் எங்கேயோ ஒரு நிலையில் இருப்பதால்தான் சமூகத்தில் தற்போதெல்லாம் குற்றங்கள் பெருகி வருகின்றன. வறுமையும், படிப்பறிவின்மையும் தொடர்கதைகளாகி வருகின்றன. குறிப்பாக, ஆசிரியர்கள், மருத்துவர்கள், காவல் துறை அதிகாரிகள், நீதித் துறைப் பணியாளர்கள், போக்குவரத்து ஊழியர்கள், உணவு பகிர்மான துறை ஊழியர்கள் போன்றவர்களின் பணி, விளிம்பு நிலை மக்களுக்கு மிகவும் பயனளிப்பவை. எனவே அவர்கள் தம் பணிகளில் நேர்மையாக இருப்பதுடன், தேவையற்ற கால தாமதத்தையும் தவிர்க்க வேண்டும்

பல அரசு அதிகாரிகள் அரசியல் அதிகாரிகளைத் திருப்திப்படுத்தவே தன்னுடைய அதிகாரத்தை பல நேரங்களில் பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

இங்கு மக்கள் பணியில் அவர்களின் நேர்மை கேள்விக்குறியாகி பேசு பொருளாகிறது. ஊடகங்கள் மூலம் பல்வேறு அதிகாரிகளைப் பற்றிய ஊழல் புகார்களும் மற்ற வகையான புகார்களும் நமக்கு தெரியவரும்போது நமக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது.

பொதுவாழ்வில் நேர்மை என்பது அதிகாரிகளுக்கு மட்டுமல்ல, பொதுமக்களுக்கும் மிகவும் அவசியம். இவர்கள் கையூட்டுக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

அரசு அதிகாரிகள் பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்து மாத வருமானத்தை பெறுபவர்கள். இந்த நிலையில் பொதுமக்களுடைய நலம் மட்டுமே அவர்களுடைய முதன்மைப் பொறுப்பாக இருக்க வேண்டும். விரைவாக கோப்புகளை முடித்து அதன் பலன்கள் விரைவாக மக்களைச் சென்று சேர தேவையான முயற்சிகளை அவர்கள் எடுக்க வேண்டும்.

இந்தியாவில் மக்களவை உறுப்பினர்களில் 2009 ஆம் ஆண்டு 58 சதவீதமாக இருந்த கோட்டீஸ்வரர்கள், 2019 இல் 88 சதவீதமாகவும், நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் 93 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது வரவேற்கத்தக்கது.

மேலும் அவர்களின் மாத ஊதியம் ரூ.1 லட்சத்திலிருந்து ரூ.1.24 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. கூடுதலாக, தற்போதைய மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாதாந்திர ஓய்வூதியமும் ரூ. 25,000 இலிருந்து ரூ.31,000 என்று உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான பொருளாதார ஏற்றத்தை சாமானிய மக்களும் பெற்றால் மகிழ்ச்சியடைவார்கள்.

அதிகாரம் என்பது பதவிவழியாகவோ, மக்களாட்சி பிரதிநிதி என்கிற முறையிலோ எப்படி இருந்தாலும், அது மக்கள் நலனுக்காக மட்டுமே முறையாகப் பயன்பட வேண்டும். பதவியிலிருப்பவர்களின் ஒவ்வொரு கையொப்பத்துக்கும் அதிகாரம் உண்டு. அரசு அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் மக்கள் நல திட்டங்கள் அவர்களுக்கு தேவைப்படும் நேரத்தில் சென்றடைய சுணக்கமில்லாமல் பணியாற்ற வேண்டும். (தினமணி)

# இந்தவார ராசிபலன் 30.03.2025 - 06.04.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 16
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பிரதமை

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எதிர்பாராத விதமாக வீட்டு செலவுகள் அதிகரிக்கும். பின்னர், திருமகளின் கருணையால் ஓரளவுக்குப் பொருளாதார முன்னேற்றங்கள் சிறப்பாக அமைந்து மனமகிழ்ச்சி தரும். நவீன வசதிகளுடன் கூடிய புதிய இருசக்கர வாகனம் வாங்க முயற்சி எடுப்பீர்கள். பல வழிகளில் உங்களை நீங்கள் அழகுபடுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படும். ஓய்வின்றி, அடிக்கடி ஏற்படும் வெளியூர்ப் பயணங்களால் அசதி ஏற்படும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் உங்கள் உற்றார் உறவினர் ஆகியோர், உங்கள் அசாத்திய முன்னேற்றம் கண்டு பெருமிதம் கொள்வர். எல்லாக் காரியங்களும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். அரசு மூலம் வர வேண்டிய அனைத்து பண நிலுவைகள் அதிகாரிகள் பலத்த சிபாரி சின் மூலம் கிடைத்துவிடும். வியாபாரத்தில் அதிக இலாபங்கள் உண்டாகும். அரசாங்கத்திடமிருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் பிறர் உங்களை புகழ வேண்டும் என்பதற்காக, கடினமான காரியங்களையும் இழுத்துப் போட்டுச் செய்வார்கள். அதேபோல் பணியிடத்தில் அதிகாரிகள் பாராட்டைப் பெறுவார்கள். காவல்துறை, இராணுவம் போன்ற சீருடைப் பணியாளர்களுக்கு சீரிய சேவைக்கான பதக்கங்கள், பாராட்டுக்கள் கிடைக்கும். விபத் துக்களை தவிர்க்க வாகனங்களை இயக்கும் போது அதிக கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் இயக்கவும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் மனதில் புதிய வீடு, மனை ஆகியவை வாங்கும் எண்ணம் மேலோங்கும். மனோதைரியம் ஓங்கும். பல வழிக ளிலும் தனவரவு அதிகரிக்கும், சிலருக்கு நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். தாய்வழி உறவுகளால் எதிர்பார்த்த ஆதாயம் இருக்கும். பெரியவர்கள் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவு, புதிய தொடர்புகள் நன்மையும் ஏற்படும். ல் அதிக இலாபம் ஈட்டுவர்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் சொத்துக்கள் சேரும். தான தர்மத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் கஷ்டமும், சுகமும் மாறி மாறி வரும். கலைத் துறையில் உள்ளவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும். உயர்ரக வாகனங்கள் வாங்கும் யோகம் அமையும். போட்டி பந்தயங்களில் வெற்றி உண்டு. புத்தக வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோருக்கு முன்னேற்றம் இருக்கும். பேரின்பம் அடைவது உறுதி.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் கேளிக்கை, பிறந்த நாள் விருந்துகள் எனச் செலவுகளோடு, மகிழ்ச்சி பொங்கும் வாரம் ஆகும். அரசு மரியாதை கிட்டும். உயர் பதவிகள் கிடைக்கும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். வியாபார சம்பந்தமான வெளிநாட்டு பயணங்களும், அதனால் ஆதாயங்களும் ஏற்பட்டு, எதிர்பாராத தன வரவுகள் கைக்கு வந்து சேரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் அனுசரணையில் வெற்றிகரமாக முடியும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் மணவாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை. விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் தன வருவாய் திருப்திகரமாக இருக்கும். செல்வத் திற்கு அதிபதியான அலைமகளே உங்களைப் பார்த்துச் சிரித்தால் நீங்கள் மகிழ மாட்டீர்களா ? விவசாயிகளுக்கு விளைச்சல் அதிக ரித்து, இலாபமும் அதிகரிக்கும். அரசு சிபாரிசால் பல நாட்கள் தள்ளிப் போன, அதிகாரம் மிக்க பதவிக்கு பதவி உயர்வு கிடைக்கும். உங்கள் சிறந்த பணிக்காக மேலதிகாரிகளால் மெச்சப் படுவீர்கள்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் மனதில் தெய்வ பக்தி கூடும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியமும், புதுத் தெம்பும், புத்தொளியும் ஏற்படும். பணக்கார மனைவியும் அமை வாள். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். புண்ணியத் தல யாத்திரைகள் ஏற்படும். கௌரவம், பட்டம், பதவி ஆகியவை தேடிவரும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்களால் வருமானம் அதிகரிப்பதால் உள்ளம் மகிழும்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். அனைத்து காரியங்களிலும் சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். தூரப் பயணங்கள் செல்கையில் எச்சரிக்கை தேவை. புத்தி தெளிவு மற்றும் செயல்திறன் அதிகரிக்கும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத விதமாக பல திசைகளில் இருந்தும் பணம் வரலாம். தங்கள் வாக்கு வன்மை மற்றும் சிறந்த பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். தானிய உற் பத்தி பெருகி விவசாயிகளுக்குத் தனவரவு திருப்தி அளிக்கும் வகை யில் இருக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீணான வாக்குவாதத்தில் ஈடுபட்டு இருப்பது நல்லது அல்ல. அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் மனைவிமார்கள் தங்கள் கணவரிடம் இருந்து உண்மைக் காதலையும், உன்னத அன்பையும் பெறுவர். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். அரசுப் பணியாளர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், புதிய பதவிகள் தேடிவரும். பணிபுரியும் பெண்கள் தங்க ளுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர். பங்குச் சந்தையில் ஆலோசித்து முதலீடு செய்வது இழப்பைக் குறைக்கும். தொழிலில் உங்கள் கூட்டாளிகளின் உழைப்பு திருப்தி கரமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமை மீறல்கள், பொறுப்புக்கூறல் பிரச்சினைகளை மீண்டும் முன்னரங்கத்துக்கு கொண்டுவந்திருக்கும் அண்மைய சம்பவங்கள்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கை அரசியலில் அண்மைய நாட்களாக அடுத்தடுத்து இடம்பெற்றுவந்த சர்ச்சைக்குரிய சம்பவங்கள் மனித உரிமை மீறல்கள் மற்றும் பொறுப்புக்கூறலுடன் தொடர்புடைய பிரச்சினைகளை மீண்டும் முன்னரங்கத்துக்கு கொண்டு வந்திருக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அல் ஜசீரா செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணல், பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பித்த அரசாங்கத்தின் செயல், இரு வாரங்களாக தலைமறைவாக இருந்த இடைநிறுத்தம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நீதிமன்றத்தில் சரணடைந்த பிறகு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றமை, முன்னாள் இராணுவ தலைவர்கள் சிலர் மீது பிரிட்டன் விதித்திருக்கும் தடைகள் ஆகியவையே அந்த சம்பவங்களாகும்.

முன்னாள் ஜனாதிபதி விக்கிரமசிங்க பெப்ரவரி மாதம் லண்டனில் வைத்து அல் ஜசீராவின் ' ஹெட் ரு ஹெட்' நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணல் மார்ச் 6 ஆம் திகதி ஒளிபரப்பானது. தனது அரசியல் அனுபவம், அறிவு மற்றும் சாதுரியத்தில் அதீத நம்பிக்கை கொண்டவரான விக்கிரமசிங்கவை பொறுத்தவரை, அவருக்கு விரோதமான சபையோரின் முன்னிலையில் இடம்பெற்ற அந்த நிகழ்ச்சி உண்மையில் பெரிய அனர்த்தமாக போய்விட்டது. அல் ஜசீரா செய்தியாளர் மெஹ்டி ஹசன் பிறப்பதற்கு முன்னரே தான் அரசியலுக்கு வந்து விட்டதாக அவரிடம் கூறவேண்டிய அளவுக்கு ஒரு நிர்ப்பந்த நிலை விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டது பரிதாபமானதாகும். நேர்காணலைப் பற்றி உள்நாட்டில் விமர்சனம் செய்தவர்களில் அனேகமாக சகலருமே அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு அவர் இணங்கியிருக்கக் கூடாது என்றே கூறினாரகள்.

மெஹ்டி ஹசன் விக்கிரமசிங்கவை நேர்காணல் செய்த விதம் பெருமளவுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. கேள்விகளுக்கு பதிலளிப்பவர் தனது பதிலை நிறைவு செய்யவிடாமல் அட்டகாசமான முறையில் குறுக்கீடு செய்வதும் ஒரு எதிரியை நோக்கி கேள்வி கேட்பதைப் போன்ற தொனியில் மூத்த அரசியல் தலைவர்களுடன் பேசுவதும் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு ஊடகத்துறைச் செயற்பாடாக இருக்க முடியாது.

இரு மணித்தியாலங்கள் பதிவு செய்யப்பட்ட தனது நேர்காணலில் முக்கியமான பகுதிகளை திட்டமிட்டு நீக்கிவிட்டு அல் ஜசீரா ஒரு மணித்தியாலமே அதை ஒளி பரப்பியதாக விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டினார். ஆனால், ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) யின் இரண்டாவது கிளர்ச்சிக் காலத்தில் (1988 - 1990 ) கம்பஹா மாவட்டத்தில் உள்ள பட்டலந்த பிரதேசத்தில் இயங்கிய தடுப்புக்காவல் மற்றும் சித்திரவதை முகாம் தொடர்பாக தொடுக்கப்பட்ட கேள்விக்கு முன்னாள் ஜனாதிபதி அளித்த நழுவல் போக்கிலான பதில்தான் இறுதியில் 27 வருடங்கள் பழமையான பட்டலந்த ஆணைக்குழு வின் அறிக்கையை தூசி தட்டி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசாங்கத்துக்கு தைரியத்தைக் கொடுத்தது.

அல் ஜசீரா நேர்காணல் ஒளிபரப்பாகாமல் இருந்திருந்தால் ஆணைக்குழு அறிக்கை தற்போதைக்கு வெளியில் வந்திருக்குமா என்பது சந்தேகமே. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் 1995 செப்டெம்பரில் நியமிக்கப்பட்ட பட்டலந்த ஆணைக்குழு அதன் அறிக்கையை 1998 ஆம் ஆண்டில் அவரிடம் கையளித்தது. ஆனால், அதன் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் திருமதி குமாரதுங்கவோ அல்லது அவருக்கு பிறகு ஜனாதிபதியாக பதவியில் இருந்தவர்களோ ஒருபோதும் அக்கறை காட்டவில்லை.

ஆனால், ஆணைக்குழு அறிக்கையின் மென்பிரதிகள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் மத்தியில் ஏற்கெனவே பகிரப்பட்டிருந்தது என்கிற அதேவேளை, விக்கிரமசிங்க தன்னிடம் பட்டலந்த முகாம் பற்றி மெஹ்டி ஹசன் கேட்டபோது 'ஆணைக்குழுவின் அறிக்கை எங்கே?" என்று பொருத்தமில்லாத வகையில் பதில் கேள்வி எழுப்பினார்.

கொழும்பில் முன்னாள் பி.பி.சி. செய்தியாளராக பணியாற்றிய பிரான்சிஸ் ஹரிசன் ஆணைக்குழு அறிக்கையின் பிரதி ஒன்றை அவருக்கு காண்பித்தபோது 'அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை" என்று விக்கிரமசிங்க கூறினார்.


பட்டலந்த விவகாரத்தில் உரக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான வீடமைப்பு தொகுதியை பொலிசார் பயன்படுத்துவதற்கு அனுமதித்ததில், அன்றைய கைத்தொழில் துறை அமைச்சர் என்ற வகையில், உரிய நடைமுறையை கடைப்பிடிக்கவில்லை என்று மாத்திரமே தன் மீது அறிக்கையில் குறை கூறப்பட்டிருப்பதாக ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி இனிமேல் தான் பட்டலந்த விவகாரம் குறித்து எதுவும் பேசப் போவதில்லை என்று சில தினங்களுக்கு முன்னர் 'அத தெரண' வின் ஹைட் பார்க் 24 நேர்காணலில் கூறினார். அறிக்கை தொடர்பாக பாராளுமன்றத்தில் ஏப்ரில் 10 திகதியும் பிறிதொரு தினத்திலும் விவாதம் நடைபெறவிருக்கிறது.

ஆணைக்குழுவின் அறிக்கையில் இரண்டாவது கிளர்ச்சிக் காலத்தில் ஜே.வி.பி. யினர் செய்த அட்டூழியங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருப்பதால் பாராளுமன்ற விவாதத்துக்கு பிறகு எத்தகைய நடவடிக்கைகளை எடுப்பது என்பதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒரு சிக்கலை எதிர்நோக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

விக்கிரமசிங்கவுக்கு பிரச்சினையைக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கையில் தான் அரசாங்கம் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையில் அவசரம் காட்டியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அவரது குடியியல் உரிமைகளை பறிக்க முடியும் என்று கூட அரசாங்க அரசியல்வாதிகள் சிலர் பேசினார்கள். தென்னிலங்கையில் இடம்பெற்ற உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கையில் அக்கறை காட்டுகின்ற அரசாங்









கம் வடக்கு, கிழக்கில் உள்நாட்டுப்போரின் போது இடம்பெற்ற உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்திய பல்வேறு ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் விடயத்தில் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கப் போகிறது என்பது முக்கியமான ஒரு கேள்வி.

உதாரணத்துக்கு கூறுவது என்றால், சர்வதேச சமூகத்தின் நெருக்குதலை அடுத்து 15 பிரத்தியேகமான உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 2006 ஆம் ஆண்டில் நியமித்த உடலாகம ஆணைக்குழு அறிக்கை, போரின் முடிவுக்கு பிறகு 2011 ஆம் ஆண்டில் அவர் நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை, காணாமல் போனோர் தொடர்பாக ஆராய்வதற்கு 2013 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழு அறிக்கை, முன்னைய ஆணைக்குழுக்கள் சகலவற்றினதும் அறிக்கைகளை மீளாய்வு செய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச 2021 ஆம் ஆண்டில் நியமித்த நவாஸ் ஆணைக்குழு ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்த அறிக்கை என்று போர்க்கால மீறல்கள் தொடர்பிலான பல அறிக்கைகள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன.

அரசியல் அனுகூலத்துக்காக ' தெரிந்தெடுத்த முறையில' பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கையில் எடுத்திருக்கிறது. உரிமை மீறல்கள் என்று வருகின்றபோது பாரபட்சமின்றி முன்னைய சகல ஆணைக்குழுக்களின் அறிக்கைகளையும் கவனத்தில் எடுக்கக்கூடிய அரசியல் துணிவாற்றல் அரசாங்கத்துக்கு வரும் என்று எதிர்பார்க்க முடியாது.

அடுத்ததாக, பொலிஸ்மா அதிபர் தேசபந்து விவகாரத்தைப் பொறுத்தவரை, அவர் வீட்டில் இருந்து மூன்று வேளை உணவையும் வரவழைத்துக்கொண்டு விளக்கமறியலில் இருக்கிறார். முக்கியமான புள்ளிகள் விளக்கமறியலுக்கு அனுப்பப்படும்போது அவர்களை உடனே தொற்றிக்கொள்ளும் ஒருவகை 'நோய்' தேசபந்துவை பீடிக்கவில்லை. இன்னமும் அவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவில்லை.

அவரை பதவி நீக்குவதற்கான பிரேரணையை ஆளும் கட்சியின் 115 பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த வாரம் சபாநாயகரிடம் கையளித்திருக்கிறார்கள். அரசியலமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்கியதை அடுத்து தேசபந்துவை பொலிஸ்மா அதிபராக ஜனாதிபதி விக்கிரமசிங்க நியமித்தார். அந்த அங்கீகாரத்தை வழங்குவதற்கு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் சபாநாயகர் நடந்து கொண்ட முறை குறித்து சர்ச்சை கிளம்பியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், அவரது நியமனத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் ஒன்பது அடிப்படை உரிமை மீறல் மனுக் கள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் அவர் பொலிஸ்மா அதிபராக பதவி வகிப்பதற்கு தகுதியற்றவர் என்றும் அவர் பொலிஸ்மா அதிபராக பதவியில் இருப்பதற்கு எதிராக உயர்நீதிமன்றம் இடைக்காலத்தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்திருந்தது என்பதால் அவருக்கு எதிராக பூர்வாங்க சான்றுகள் இருப்பதாகவும் அந்த பிரேரணை யில் கூறப்பட்டிருக்கிறது.

தேசபந்து தனது நடத்தைகள் மூலமாக பொலிஸ்மா அதிபர் பதவிக்கும் பொலிஸ் திணைக்களத்துக்கும் அவப் பெயரை ஏற்படுத்திவிட்டதாகவும் குற்றச்செயல்களில் ஈடுபட்ட குறிப்பிட்ட சில நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தவறியமைக்காக அவர் மீது வழக்கு தொடுக்கப்பட வேண்டும் என்றும் பிரேரணையில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவருக்கு எதிராக ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 23 குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருக்கிறார்கள். குற்றச்சாட்டு கள் குறித்து ஆராய்வதற்கு சபாநாயகர் குழுவொன்றை நியமித்து அதன் தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டுதான் அவர் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்பதே நடைமுறை.

ஆனால், தேசபந்துவை பதவி நீக்குவதற்கான பிரேரணை ஏப்ரில் 8, 9 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக் கிறது. பொலிஸ்மா அதிபர் ஒருவர் இரு வாரங்களாக தலைமறைவாகி இருந்து இறுதியில் ஆடம்பர வாகனம் ஒன்றில் வந்து நீதிமன்றத்தில் சரணடைந்தது உலகிலேயே இலங்கையில்தான் முதற் தடவையாக நடந்திருக் கிறது எனலாம்.

இது இவ்வாறிருக்க, கடந்த வாரம் இலங்கையின் மூன்று முன்னாள் இராணுவ தலைவர்களுக்கும் விடுதலை புலிகள் இயக்கத்தின் முன்னாள் கிழக்கு தளபதி கருணா அம்மான் என்ற விநாயகமூர்த்தி முரளிதரனுக்கும் எதிராக பிரிட்டன் தடைகளை விதித்திருக்கிறது.

ஆயுதப் படைகளின் முன்னாள் பிரதானி சவேந்திர சில்வா, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, முன்னாள் இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரிய ஆகியோரே தடைகள் விதிக்கப்பட்ட இராணுவ தலைவர்களாவர். பிரிட்டனுக்கான பயணத்தடையும் சொத்துக்கள் முடக்கமும் இந்த தடைகளில் அடங்கும். 'உள்நாட்டுப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகக்களுக்கு பொறுப்புக்கூற வைத்தல் உட்பட இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் ஐக்கிய இராச்சிய அரசாங்கம் பற்றுறுதி கொண்டிருக்கிறது" என்று மார்ச் 24 ஆம் திகதி தடைகள் விதிப்பை அறிவித்த வெளியுறவு, பொது நலவாய மற்றும் அபிவிருத்தி விவகாரங்கள் இணையமைச்சர் டேவிட் லாமி கூறினார்.

வெளிநாடுகள் குறிப்பாக மேற்குலக நாடுகள் இலங்கை அரசியல் தலைவர்களுக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் எதிராக இவ்வாறு தடைகளை விதிப்பது இதுதான் முதற்தடவை அல்ல. ஏற்கெனவே சவேந்திர சில்வாவுக்கு எதிராக 2020 பெப்ரவரியில் அமெரிக்க இராஜாங்க

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திக்கான தடைகளை அகற்றுதல்



கலாநிதி ஜெகான் பெரேரா

அரசியல் மற்றும் பொருளாதார உறுதிப்பாடு தொடர்ந்து நிலவுவதும் விரயமும் ஊழலும் குறைந்திருப்பதுமே ஆறு மாத காலத்தில் புதிய அரசாங்கத்தின் நேய்மறையான பிரதான சாதனைகளாக இருந்து வருகின்றன. கடந்த காலத்தில் இவை இல்லாமல் இருந்ததே நாடு அபிவிருத்தி அடையமுடியாமல் இருந்தமைக்கு கணிசமானளவுக்கு காரணமாயிருந்தன. உறுதிப்பாட்டைப் பேணுவதற்கும் ஊழலை இல்லாமல் செய்வதற்கும் அக்கறையுடனான முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்துவருவது நாட்டின் சிறந்த எதிர்காலத்துக்கு கட்டியம் கூறுவதாக இருக்கிறது. இன்னமும் நீண்டதூரம் செல்ல வேண்டியிருக்கிறது.

பொருளாதாரப் படிநிலையில் அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்கின்ற சனத்தொகையின் கால்வாசிப் பேருக்கும் நேரடியாகப் பயன்தரக்கூடிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று வழங்கப்பட்ட உறுதிமொழி இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறையவில்லை. அரிசி, தேங்காய் போன்ற சில உணவுப் பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரித்திருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. விரைவில் துரித அபிவிருத்தி ஏற்படும் என்று மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடியதாக பிரமாண்டமான செயற்திட்டங்கள் தற்போதைக்கு முன்னடுக்கப்படக்கூடிய அறிகுறிகளைக் காணவில்லை.

அதிகாரத்துக்கு வந்த உடனடியாக அரசாங்கங்கள் பெரிய எதிர்காலம் குறித்து மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதில் வெற்றி கண்ட ஒரு கடந்த காலத்தை நாம் கடந்து வந்திருக்கிறோம். 1977 பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு பொருளாதாரத் தாராளமயமாக்கல் நோக்கிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மிகப்பெரிய நம்பிக்கையாக இருந்தது. ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவும் அவரது குழுவினரும் பெருமளவில் சர்வதேச உதவிகளைப் பெறுவதில் வெற்றி கண்டனர். அந்த உதவிகளில் பெரும்பாலானவை நன்கொடை வடிவிலேயே கிடைத்தன.

முப்பது வருடங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மகாவலி அபிவிருத்தி திட்டத்தை வெறுமனே ஆறு வருடங்களில் துரிதமாக நிறைவு செய்வதற்கு அந்த வெளிநாட்டு உதவிகள் உதவின. கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் வறுமை ஒழிப்புக்கு உதவவும் நாடு பூராவும் 200 ஆடைத் தொழிற்சாலைகளை அமைக்கும் பெரியளவிலான திட்டம் ஒன்றை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச 1992 ஆண்டில் முன்னெடுத்தார். அந்த பெருமளவிலான திட்டங்கள் மக்களின் வாழ்வில் உடனடியாக நம்பிக்கையை ஏற்படுத்தின.

மிகவும் அண்மைக் காலத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்திட்டம், மத்தள விமானநிலையம் மற்றும் கொழும்பு துறைமுக நகரத்திட்டம் போன்றவை ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில், மெகா அபிவிருத்தி குறித்து மக்களுக்கு ஆச்சரியத்துடன் கூடிய நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால், அந்த திட்டங்களில் எதுவுமே எதிர்பார்த்த அளவுக்கு பயனைத் தரவில்லை. பொருளாதார ரீதியிலான நடைமுறைச் சாத்தியப்பாடு குறித்து சிந்திக்காமல் அரசியல் நலன்களுக்காகவும் தரகுப் பணத்துக்காகவும் முன்னெடுக்கப்பட்ட காரணத்தினால், பெரிய கடன்சுமையை ஏற்படுத்தின.

துரித பொருளாதார வளர்ச்சி குறித்து மக்களுக்கு நம்பிக்கையை கொடுக்கக் கூடிய மெகா திட்டங்களை கொண்டுவரும்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்தியாவுக்கும் சீனாவுக்கும் மேற்கொண்ட விஜயங்களின்போது ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அந்த நாடுகளின் அரசாங்கங்களுடன் பெரும் எண்ணிக்கையிலான உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டார். ஆனால், அவற்றின் பயன் விளைவுகள் குறித்து தெளிவில்லை. காற்றாலை மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு இந்திய ஒத்துழைப்புடனான 100 கோடி அமெரிக்க டொலர்கள் அதானி திட்டம் முட்டுக்கட்டை நிலையை அடைந்திருக்கிறது போன்று தெரிகிறது.

பெருமெடுப்பிலான முதலீடுகளோ அல்லது வருமானத்தைப் பெருக்கி நாட்டின் அபிவிருத்தியை உயர்ந்த ஒரு மட்டத்துக்கு கொண்டு செல்லக்கூடிய திட்டங்களோ இல்லாமல் இருப்பது அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களில் காணக்கூடியதாக இருக்கும் ஒரு இடைவெளியாகும். மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதிலும் புதிய அரசாங்கத்தின் ஆற்லுக்கும் பாரம்பரியமாக அதிகாரத்தில் இருந்து வந்த - இன்றைய எதிர்க்கட்சிகளின் ஆற்றலுக்கும் இடையே சமாந்தரங்கள் வரைவதற்கு இது கதவைத் திறந்து விட்டிருக்கிறது.

ஆனால், அண்மையில் வெளியிடப்பட்ட கடந்த வருடத்தைய பொருளாதார வளர்ச்சி குறித்த புள்விவிபரங்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் சிறப்பான முறையில் பொருளாதார நிலைவரம் இருக்கிறது என்பதை வெளிக்காட்டுகின்றன. வளர்ச்சி வீதம் குன்றியதாக காணப்பட்ட முன்னைய இரு வருட கால நிலைவரத்துக்கு மாறாக 2024 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் ஐந்து சதவீதத்தினால் வளர்ச்சி கண்டிருக்கிறது. இதில் பாராட்டக்கூடியதாக இருப்பது என்னவென்றால், (புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர்) 2024 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் பொருளாதார வளர்ச்சி 5.4 சதவீதமாக இருந்ததேயாகும். அந்தப் போக்கிலேயே தற்போதைய காலாண்டின் வளர்ச்சி வீதமும் தொடரக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

பொருளாதார வளர்ச்சி வீதத்தை நிலையானதாக வைத்திருக்கத் தவறியதே கடந்த காலத்தில் இலங்கையின் தோல்வியாகும். வெவ்வேறு அரசாங்கங்களின் கீழ் ஆரம்ப நிலைவரம் உயர்ந்த வளர்ச்சி வீதத்தைக் கொண்டதாக இருந்த போதிலும், அதன் விளைவான பயன்கள் அருகிப் போகக்கூடியதாக விரைவாகவே விரயமும் ஊழலும் தலையெடுத்து விட்டன. 1970 களின் பிற்பகுதியில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் அரசாங்கத்தின் ஆரம்பக்காலப் பகுதியில் பொருளாதார வளர்ச்சி சுமார் எட்டு சதவீதமாக இருந்தது. அந்த அரசாங்கத்தின் மெகா திட்டங்கள் அதற்கு அந்த வளர்ச்சிக்கு உதவியாக இருந்தன. ஆனால், அதே நிலைவரத்தை தொடர்ந்து பேணமுடியவில்லை.

வன்முறை மோதல்கள், விரயம் மற்றும் ஊழல் தீவிரமடைந்த நிலையில் பொருளாதாரம் மலினப்படுத்தப்பட்டது. அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்தவர்களுடன் சண்டையிடுவதற்கு பாதுகாப்பு படைகளுக்கு பெருமளவு பணத்தைச் செலவிடவேண்டியிருந்ததனாலும் விரயமும் ஊழலும் தலைவிரித்தாடியதாலும் பொருளாதார அபிவிருத்திக்கு பெருமளவில் பெரிதாக இடமிருக்கவில்லை.

வளங்களைச் சேமித்து பொருளாதார வளர்ச்சிக்கு அவற்றைப் பயன்படுத்தற்காக விரயத்தையும் ஊழலையும் கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் பற்றுறுதியை அரசாங்க உறுப்பினர்களுடன் சம்பந்தப்பட்ட செலவினங்களில் அது பின்பற்றிவரும் கண்டிப்பான ஒழுங்குமுறையில் காணக்கூடியதாக இருக்கிறது. அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரசாங்கம் 25 ஆக மட்டுப்படுத்தியிருக்கிறது. கடந்த காலத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கை பெரும்பாலும் இரண்டு மடங்காக இருந்தது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மருத்துவக் காப்புறுதி உட்பட சலுகைகளையும் வசதி வாய்ப்புக்களையும் குறைப்பதற்கான ஏற்பாடுகளையும் அரசாங்கம் செய்திருக்கிறது.

முன்னைய அரசாங்கங்களை போன்று பொதுச் சுகாதாரத்துறையை கவனிக்காமல் விடுவதற்கு பதிலாக அதை மேம்படுத்துவதில் பாராளுமன்ற உறுப்பினர்கள் இப்போது காட்டத் தொடங்கியிருக்கும் அக்கறையில் இருந்து மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளின் பெறுமதியை புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. தங்களுக்கான காப்புறுதி மட்டங்கள் குறைக்கப்பட்ட நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிகிச்சைக்காக தனியார் வைத்தியசாலைகளுக்கு செல்வதை விடவும் பொதுச் சுகாதார வசதிகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும்.

ஊழலை வேரோடு அழிப்பதற்கு மிகுந்த அக்கறையுடனான முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுப்பது தற்போதைய தருணத்தின் மிகவும் நேர்மறையான ஒரு அம்சமாகும். இலஞ்ச ஊழல் ஆணைக்குழு போன்ற (முன்னர் இயக்கம் குன்றியிருந்த) பொறுப்புக்கூறலுக்கான நிறுவனங்கள் ஊக்கப்படுத்தப்படுவதில் இருந்தும் அதிகாரத்தில் இருந்தவர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த காரணத்தினால் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்களாக முன்னர் கருதப்பட்ட பேர்வழிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் தற்போது காட்டும் ஆர்வத்தில் இருந்தும் இந்த நேர்மறையான அம்சத்தை தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

பொலிஸ் படையின் தலைவரான பொலிஸ்மா அதிபர் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பது சட்டத்தின் ஆட்சியை உறுதிசெய்வதில் காண்பிக்கப்படும் அக்கறையை வெளிக்காட்டுகிறது. செலவினக் குறைப்பு, ஊழல் ஒழிப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு கட்டுப்படுதல் ஆகிய செயற்பாடுகளின் மூலமாக அபிவிருத்திக்கான தடைகளை அரசாங்கம் அகற்றிவருகின்றது. கடந்த காலத்தில் மெகா அபிவிருத்தி திட்டங்கள் அவற்றின் முழுமையான பயன்களை தரவில்லை. வன்முறை மோதல்கள் உட்பட விரயம் மற்றும் ஊழல் நடவடிக்கைகளின் காரணமாக அந்த பயன்களை அடையமுடியாமல் போய்விட்டது.

ஆனால், அறிவும் நிபுணத்துவமும் தேவைப்படுகின்ற புத்தாக்கமான அபிவிருத்தி திட்டங்கள் அவசியமாகின்றன. அந்த அறிவும் நிபுணத்துவமும் அரசாங்கத்திற்குள் தான் இருக்கவேண்டும் என்றில்லை. இதுநாள் வரையில் அரசாங்கம் முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்ளும் அமைப்புகளுக்கு உறுப்பினர்களாக அதற்கு தெரிந்த - நீண்டகாலமாக தொடர்பில் இருந்த - நம்பிக்கைக்குரிய ஆட்களையே தெரிவுசெய்து வந்திருக்கிறது. அண்மையில் கிளீன் சிறிலங்கா செயலணிக் குழுவுக்கும் சுற்றுலாத்துறை ஆலோசனைக் குழுவுக்கும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் சகலரும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள்.

இலங்கை அதன் முழுமையான ஆற்றல்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமானால், அரசாங்கம் சகல சமூகங்களையும் அரவணைக்கின்ற ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். வடக்கு, கிழக்கைச் சேர்ந்த பிரதிநிதிகள் உட்பட நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த பல்லின - பல மத சமூகங்களையும் சேர்ந்தவர்களையும் பெண்களையும் உள்வாங்கும் அணுகுமுறையாக அது அமையவேண்டியது அவசியமாகும். அபிவிருத்தி சகலரையும் உள்ளடக்கியதாக அமையவேணாடுமானால், அது சகல சமூகங்களுக்கும் ஏற்புடையதாக அமைய வேண்டுமானால், அரசாங்கம் அதற்கு வெளியில் உள்ள பரந்தளவிலான வளங்களைப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும்.

தீர்மானங்களை மேற்கொள்ளும் அரசாங்கத்தின் அமைப்புக்களில் சிறுபான்மை இனத்தவர்ளினதும் பெண்களினதும் பிரதிநிதித்துவங்களை உறுதிசெய்வது கொள்வதன் மூலமாக அரசாங்கம் பரந்தளவில் உள்ள ஆற்றல்களையும் அனுபவங்கையும் நோக்குகளையும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். அவ்வாறான அணுகுமுறை இறுதியில் மிகவும் பயனுறுதியுடையதும் நிலைபேறானதுமான அபிவிருத்திக் கொள்கைகளுக்கு வழிவகுக்கும். நிலைபேறான அபிவிருத்தி என்பது வெறுமனே பொருளாதார வளர்ச்சியைப் பற்றியது மாத்திரமல்ல, அது சாத்தியமானளவுக்கு சகல தரப்புகளையும் அரவணைப்பதையும் கூட்டுப் பங்காண்மையையும் பற்றியதுமாகும்.

அதன் தலைமைத்துவத்தில் பல்வகைமைக்கு முன்னுரிமை கொடுக்கும் ஒரு அரசாங்கம் எதிர்பாராத வகையில் எழக்கூடிய சவால்களை கையாள்வதற்கு சிறப்பான ஆற்றலைக் கொண்டதாக இருக்கும். அதன் ஆலோசகர் தளத்தை விரிவுபடுத்துவதன் மூலமும் பரந்தளவு கருத்துக்களை உள்வாங்கிக் கொள்வதன் மூலமும் அரசாங்கத்தினால் பயனுறுதியுடைய கொள்கைகளை மாத்திரமல்ல, ஒப்புரவானதுமான கொள்கைகளையும் உருவாக்க முடியும்.

சகல தரப்புகளையும் அரவணைக்கும் ஆட்சிமுறை, பொறுப்புவாய்ந்த பொருளாதார முகாமைத்துவம் மற்றும் புத்தாக்கமான அபிவிருத்தி தந்திரோபாயங்கள் ஊடாக அரசாங்கம் அதன் சகல மக்களுக்கும் பயன்தரக்கூடிய ஒரு எதிர்காலத்தை நோக்கி நாட்டை நிச்சயமாக வழிநடத்த முடியும்.



சகல தரப்புகளையும் அரவணைக்கும் ஆட்சிமுறை, பொறுப்புவாய்ந்த பொருளாதார முகாமைத்துவம் மற்றும் புத்தாக்கமான அபிவிருத்தி தந்திரோபாயங்கள் ஊடாக அரசாங்கம் அதன் சகல மக்களுக்கும் பயன்தரக்கூடிய ஒரு எதிர்காலத்தை நோக்கி நாட்டை நிச்சயமாக வழிநடத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியா தடை விதித்தவர்களை பாதுகாக்குமாறு கோரிக்கை விடுவது போர்க்குற்றத்தை மறைமுகமாக ஏற்கிறது!

பனங்காட்டான்

இலங்கையின் உள்ளூராட்சிச் சபைத்தேர்தலில் வெற்றிக்கான பரப்புரை ஒருபக்கம் இடம்பெற, வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டவர்கள் நீதிமன்றம் ஊடாக இணக்கம் காணும் வகையில் ஏற்பாடுகள் இடம் பெறுகிறது.

மனுக்கள் நிராகரிக்கப்பட்ட தரப்புகளின் சட்டத்தரணிகள், சட்டமாஅதிபர் தலைமையில் வழக்கில் ஆஜரான சட்டத்தரணிகள் சகிதம் தேர்தல் ஆணையாளரை இன்று முப்பதாம் திகதி சந்தித்து இது தொடர்பாக ஒரு முடிவுக்கு வர உயர்நீதிமன்றம் ஆலோசனை வழங்கியுள்ளது. எதுவானாலும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி உயர்நீதிமன்றம் நியாயமான ஒரு தீர்ப்பை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கிளிநொச்சித் தொகுதியிலுள்ள பூநகரிக்கான வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. இதனையடுத்து கிளிநொச்சித் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கருத்து வெளியிடுகையில் தமது தொகுதியின் மூன்று சபைகளையும் தமிழரசு கட்சி வெற்றி கொள்ளுமென்று அறிவித்துள்ளார். கட்சியின் தலைவராக தெரிவான சிறீதரன் இப்போது தமது தொகுதியை மட்டும் மையப்படுத்தி கட்சி வெற்றி பெறுமென்று அறிவித்திருப்பது அவரே மற்றைய தொகுதிகளை வேண்டாப் பிள்ளையாக தள்ளுவது போல் தோற்றம் தருகிறது.


இன்றுள்ள சூழ்நிலையில் வடக்கு கிழக்கு முழுவதையும் தமிழர் தரப்பு கையகப்படுத்த வேண்டுமெனில் அதில் தமிழரசு கட்சிக்கே கூடுதலான பங்குண்டு. நாடாளுமன்ற தேர்தல் கால மற்றும் கட்சியின் தலைமைத் தேர்தல் கால விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்துவதற்கு உள்ளூராட்சிச் சபைத்தேர்தல் பொருத்தமான ஒன்றல்ல என்பதை தமிழரசுக் கட்சிக்காரர்கள் இப்போது உணராவிட்டால் எப்போதுமே உணர முடியாது.


தெற்கில் உள்ளூராட்சித் தேர்தல் கொஞ்சம் சூடு பிடிக்க ஆரம்பமான வேளையில், அல்ஜசீரா தொலைக்காட்சி ரணில் விக்கிரமசிங்கவின் செவ்வியை ஒளிபரப்பி பலரையும் திசை மாற்றியது. இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இயங்கிய பட்டலந்த வதைமுகாமை அல்ஜசீரா கிளறி விட்டுள்ளது. கொழும்புப் பெரும்பாகத்தில் களனிப் பகுதியை ஒட்டியதாக உள்ள பியகம தொகுதியின் வீடமைப்புத் திட்டத்தில் பட்டலந்த முகாம் அமைந்திருந்தது. 1987-1989 காலப்பகுதியில் ஜே.வி.பி.யினர் மேற்கொண்ட அட்டகாச வன்செயல்களில் ஈடுபட்டவர்களென கைதானவர்களைத் தடுத்து வைத்து விசாரிக்க இந்த முகாம் அமைக்கப்பட்டது.

பியகம தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக ரணில் விக்கிரமசிங்க இருந்ததால் இந்த முகாம்களுக்குப் பொறுப்பாக அவர் செயற்பட்டதாக பதிவுகள் கூறுகின்றன. கைதானவர்களில் பெரும்பாலானவர்கள் ஜே.வி.பி.யினர். ஆதலால் பட்டலந்த தொடர்பான ஆணைக்குழு அறிக்கையை தங்கள் ஆட்சியின்போது இவர்கள் தூசு தட்டி எடுப்பதில் நியாயமுண்டு. இலங்கை-இந்திய ஒப்பந்தம் எனப்படும் ஜே.ஆர். - ராஜிவ் ஒப்பந்தத்தை எதிர்த்து 1987-1989 காலப்பகுதியில் ஜே.வி.பி. நடத்திய போராட்டம் எல்லை கடந்தது. இந்தியாவுக்கு எதிரான போராட்டம் என்றே இது கூறப்பட்டது.

ஆனாலும், இதனால் இந்தியப் பொருட்களை விற்பனை செய்த பெட்டிக்கடை தமிழ் வணிகர்கள் உட்பட பெரும் முதலாளிகள் பாதிக்கப்பட்டனர். இந்திய தயாரிப்புகளான வீபூதி, சந்தனம், குங்குமம், கற்பூரம் விற்பனை செய்த கடைகள் தீக்கிரையாக்கப்பட்டு பலர் கொல்லப்பட்டனர். இந்தியப்படங்களை திரையிட்ட திரையரங்குகளும் தகர்க்கப்பட்டன.

இவ்வகையான அராஜகங்களில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைதாகி பட்டலந்த முகாமில் வைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடைபெற்றது









> “குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களை நாடுகடத்தும்போது அவர்கள் தப்பிவிடக்கூடாது என்பதற்காக தங்கள் நாட்டு அதிகாரி ஒருவரையும் கண்காணிப்புக்காக அனுப்புவது மேற்கு நாடுகளின் சட்ட வழமை. இதனைப் புரிந்து கொள்ளாது தம்மை பாதுகாப்புடன் நாட்டுக்கு அனுப்பிய பிரித்தானியா இப்போது குற்றவாளியாகப் பார்க்கிறது என்று கருணா கூறுவது வேடிக்கையான விநோதம்.

என்பதை அறிய ஜே.வி.பி.யின் மறுவடிவமான அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தி அரசு முனைகிறது. காணாமற்போன தோழர்களுக்காக இன்றைய தோழர்கள் குரல் கொடுக்கிறார்கள். எனினும், இந்த விசாரணைக்குழு அறிக்கையினால் எதுவுமே வெளிவரப்போவதில்லை என்பதே பல அரசியல் தலைவர்களின் கருத்து.

உள்ளூராட்சித் தேர்தல், ரணிலின் பட்டலந்த முகாம் ஆகிய இரண்டையும் சற்றே பின்தள்ளிவிட்டு பிரித்தானிய அரசின் தடைவிதிப்பு இப்போது முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. மூன்று படைத்துறை முன்னாள் அதிகாரிகளுக்கும், விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண முக்கியஸ்தராகவிருந்து அரசாங்க தரப்புக்கு மாறிய கருணா எனும் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கும் பிரித்தானிய அரசு பயணத்தடையுடன் சொத்து முடக்க அறிவிப்பையும் வெளியிட்டது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானியான சவேந்திர சில்வா, கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரணகொட, இராணுவத்தின் முன்னாள் தளபதிகளில் ஒருவரான ஜகத் ஜெயசூரிய ஆகியோரே தடைக்குள்ளாகியிருக்கும் முன்னாள் படைத்துறை அதிகாரிகள். இவர்களுடன் நாலாவது ஆளாக கருணாவுக்கும் பிரித்தானிய அரசு தடைவிதித்துள்ளது.

இலங்கைப் படைத்துறையைச் சேர்ந்த சிலருக்கும் அரசியல் தலைவர்களுக்கும் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் மனித உரிமைகள் குற்றச்சாட்டில் ஏற்கனவே தடை விதித்துள்ளன. ஆனால், பிரித்தானியா விதித்துள்ள இந்தத் தடை, அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றுள்ளதால் அதிமுக்கியத்துவம் பெற்றுள்ளது.

போர் வெற்றியைக் கொண்டாடிய அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே இந்தத் தடையை எதிர்த்து முதலில் அறிக்கை விட்டவர். பிரித்தானியாவின் தடை உத்தரவை தாம் நிராகரிப்பதாகக் கூறியுள்ளதோடு, நாட்டைக் காப்பாற்றிய முன்னாள் பாதுகாப்புப் படையினரை வெளிநாட்டு சக்திகளிடமிருந்து பாதுகாக்க வேண்டியது தற்போதைய அநுர குமர அரசின் பொறுப்பு என்று இந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சிங்கள தேச பக்தர்களாக தங்களைக் காட்டிக்கொள்ளும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, முன்னாள் கடற்படை அதிகாரி சரத் வீரசேகர ஆகிய மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்கள், கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தும் நோக்குடன் பிரித்தானிய தடையைக் கண்டித்து அறிக்கைகளை விடுத்து வருகின்றனர். அரசியலிலிருந்து ஓய்வு பெற்றதாக அறிவித்த நவசமாஜ கட்சியின் வாசுதேச நாணயக்காரவும் தமது பங்குக்கு தடையைக் கண்டித்து ஓர் அறிக்கையை விடுத்துள்ளார்.

போர்க்கால ராணுவ தளபதியான சரத் பொன்சேகாவின் அறிக்கை சற்று வித்தியாசமானதும், குழப்பமானதும். மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டிருந்தால் ராணுவத்தினராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்று தெரிவித்துள்ள இவர், சவேந்திர சில்வா எந்தக் குற்றமும் செய்யாதவர் என்று வக்காலத்து வாங்கியிருப்பது விநோதமானது. சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் அறிக்கை இன்னொரு வகையில் வித்தியாசமானது. கருணாவுக்காக அல்லாது படையினருக்காக அரசாங்கம் முன்னிலையாக வேண்டுமென இவர்கள் விடுத்திருக்கும் வேண்டுகோள் கருணா மீதான தடையை ஏற்றுக்கொள்வதாக அர்த்தப்படுத்துகிறது.

அநுர குமர அரசும் ஓர் அறிக்கை விடுத்துள்ளது. எந்தவொரு மனித உரிமை மீறல்களும் உள்நாட்டு பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் மூலம் கையாளப்பட வேண்டுமென்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் சுட்டியுள்ளார். இதுவரை பிரித்தானிய தடை தொடர்பாக வெளிவந்த எந்த அறிக்கைகளும் தடை செய்யப்பட்டவர்கள் குற்றம் புரியாதவர்கள் என்று சொல்லவில்லை. இவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்றே கேட்டுள்ளன. ஆனால், இலங்கை அரசின் அறிக்கை அதனையும் சொல்லாது மிகவும் பலவீனமானதாக இருப்பதாக பலரும் தெரிவித்துள்ளனர்.

தடைசெய்யப்பட்ட நால்வரில் தனித்து விடப்பட்டுள்ள கருணா வெளியிட்டிருக்கும் கருத்து குழந்தைத்தனமானது. பிரித்தானியாவிலிருந்து அந்த நாட்டு அரசின் பாதுகாப்புடன் தாம் அன்று கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டதாகவும், அந்த பிரித்தானியாவுக்கு இப்போது தான் கருணா பிழைவிட்டது தெரிகிறதா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

கோதபாய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தபோது அவரது உத்தரவின்பேரில் வழங்கப்பட்ட இலங்கையின் ராஜரிக கடவுச்சீட்டில் பிரித்தானியா சென்ற கருணா அங்கு கைது செய்யப்பட்டு 2008ம் ஆண்டு ஜூலை 3ம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர். மேற்கு நாடுகளில் ஏதாவது குற்றச்செயலில் ஈடுபட்டவர் நாடு கடத்தப்படும்போது அவர் தப்பி விடக்கூடாது என்பதற்காக அந்நாட்டு அதிகாரி ஒருவரின் கண்காணிப்பில் சொந்த நாட்டுக்கு அனுப்பப்படுவது நடைமுறை. இதனை அந்நாட்டின் பாதுகாப்போடு தாம் நாடு திரும்பியதாக கருணா கதையளப்பது வேடிக்கையானது.

தற்போது கிழக்கு மாகாணத்தில் மீண்டும் அரசியலில் ஈடுபட்டுள்ள கருணா இத்தடையை தமக்கான பலமாக்குவதில் ஈடுபட்டுள்ளார். கிழக்கு மாகாண சபைகளை தாங்கள் கைப்பற்றாவிட்டால் முஸ்லிம்களின் ஆதிக்கம் மேலோங்கிவிடுமென்று கூறி இங்கு வாழும் சிறுபான்மை இனங்களுக்கிடையே மோதலுக்கும் கருக்கூட்டியுள்ளார்.

போரின்போது பல இன மக்களும் உயிரிழந்துள்ளனர். இதனை மீளக் கிளறுவதால் இனங்களுக்கிடையில் முரண்பாடுதான் ஏற்படும் எனும் ஞானஉபதேசத்தையும் போர்க்குற்றவாளிகளில் ஒருவரான கருணா செய்வது முன்னுக்குப் பின் முரணானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர் சடையம்மா சுவாமிகளுக்கு 170 ஆண்டுகளின் பின் திருக்கோவில்

கலாநிதி சின்னத்தம்பி பத்மராஜா

**ஈழத்தின் முதல் பெண் சித்தர் சடையம்மாவுக்கு திருநெல்வேலி கிழக்கில் திருக்கோவில் அமைக்கப்பட்டு திருவுருவ சிலை பிரதிஷ்டை நாளை திங்கட்கிழமை நடைபெறுகிறது. இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா இன்று (31.03.2025) திங்கட்கிழமை காலை 9.15 மணி முதல் 10.40 வரையான சுபமுகூர்த்த நன்னாளில் நடைபெறவுள்ளது. இதன் சிறப்பம்சமாக ஈழத்தின் முதல் பெண் சித்தர் யாழ்ப்பாணத்து நல்லூர் சடையம்மா சுவாமிகளுக்கு புதிதாக ஆலயம் அமைக் கப்பட்டு அவரது திருவுருவச் சிலை பிரதிஷ்டையும் இடம் பெற உள்ளது. சித்தர் சடையம்மா சுவாமிகள் அவதரித்த ஊரில் 170 ஆண்டுகளின் பின்னர் ஆலயம் அமைக்கப்பட்டுள் ளமை சிறப்பாகும்.



சடையம்மா சுவாமிகள், 19.08.1865 ஆம் ஆண்டு ரோகினி நட்சத்திரத்திலே வீரகத்திப் பிள்ளை - சின்னாச் சிப்பிள்ளை தம்பதியரின் மகளாக முத்துப் பிள்ளை எனும் பிள்ளைத் திரு நாமத்துடன் அவதரித்தார். தனது 11ஆவது வயதிலே நந்தி கோத் திரத்தை சேர்ந்த கதிரேசு என்பவரை திருமணம் செய்து இல்லற வாழ்வை ஆரம்பித்தார். இரு பெண் பிள்ளைகளின் தாயாக விளங்கிய இவர் அப்பர் சுவாமிகளது வாக்கிற் கமைய 'தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" என்பதற் கமைய சரியைத் தொண்டு புரிந்து இறையாசி பெற்று வருநாளில் இமைப்பொழு தும் இறைநாமத்துடன் இல்லறத்தில் துறவற நிலையை பேணி காதலாகி கசிந்து கண்ணீர் மல்க ஆலயந்தானும் அரன் எனத்தொழுமே என்பதற்கமைய பக்தியோகி ஆகி வரும் நாளில் இவரது கணவர் நோய்வாய்ப்பட, அது நீங்க நல்லூரான் வாசல் சென்று அவனையே தஞ்சம் எனக் கொண்டு அங்கேயே தங்கியிருந்து சரியை தொண்டாற்றினார்.



இக்காலத்திலே காசி, இராமேஸ்வரம், முதலாய தென் னிந்திய திருத்தலங்களுக்கு சென்று வழிபாடு இயற்றி கங்கை, காவேரி, சரஸ்வதி ஆகிய திரிவேணி சங்கமத் திலே புனித தீர்த்தமாடி ஆன்மீக அறிவு கைவரப் பெற்று பதிஞானம், பசு ஞானம் கைவரப் பெற்று அது முதிரப் பெற்று ஞான யோகி யானார். மெல்ல மெல்ல இல்லற வாழ்வை நீக்கி துறவற வாழ்வை ஏற்கும் நாளில் வாலையம்மனின் அருட்பார்வையால் யோகம் கைவரப் பெற்றார்.

வாலை என்னும் குண்டலினி யோக பயிற்சியால் தத்தம் உடலில் உள்ள தெய்வங்களை மனக் கண்ணால் கண்டார். அட்டாங்க யோகத்தில் பிரணாயமம், தியா னம், சமாதி ஆகியவை கைவரப் பெற்ற நிலையில் யோகம் கைவரப்பெற்ற இவர் அண்டத்தில் உள்ளதை பிண்டத்தில் காண்பவராகி நெற்றியில் சதாசிவனையும் கழுத்திலே மகேஸ்வரனையும் நெஞ்சிலே உருத்திரனை யும் உந்தியிலே விஷ்ணுவையும் மூலத்திலே பிரம்மனை யும் காணும் ஆற்றல் கைவரப் பெற்றார். தியான நிலை யில் இறைவன் திருவுருவை கண்டு இன்புற்றும், அருவத் தியானம் சமாதி நிலைக்கு வழி செய்யும் எனவே இது கைவரப்பெற்று தியான யோகியானார்.

இந்நிலையில் தன் மாங்கல்யத்தை கழற்றி கணவனிடம் கையளித்து குடும்ப வாழ்வைத் துறந்து மக்கள் பணி ஆற்றத் தலைப்பட்டு சமூக நோக்கோடு நல்லூர் தேரடி மடம், கதிர்காம மடம், கீரிமலை மடம் முதலியவற்றை ஈழத்திலும் கடல் கடந்து திருச்செந்தூர் சென்று அங்கேயும் மடம் அமைத்து பசித்தோர் முகம் பார்த்து அன்ன தானப் பணி புரிந்தார். இவர் மனதால் நினைப்பதை அடியவர் தாமாகவே வழங்கி பேருதவி புரிந்தனர். பொன்னும் பொருளும் வாரி வழங்கினர். மடங்கள் அமைத்து பணி புரிந்தார். சுவாமி இராமகிருஷ்ணரின் பொன்மொழிக்கேற்ப 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணலாம்" என்பதை மெய்ப்பித்தார் வள்ளலார் சுவாமிகளின் திருஞானக் கோட்டம் போல் உணவும் உறையுளும் வழங்கி உலமாந்தரை உய்வித்தார். நாடிவரும் அடியவர் தம் மனக் கவலைகளை நீக்கினார்.

இந்நிலையில் அடிக்கடி தியான நிலைக்கு சென்று வரும் இவர் ஈழத்து சித்தர் பரம்பரையின் மூலவர் ஆகிய கடையிற் சுவாமிகளிடமும் பால்குடி பாபா சுவாமிகளிடமும் தீட்சை பெற்று அவர்களையே குருவாக ஏற்று

(14ம் பக்கம் பார்க்க)

# கடந்த கால நினைவுகளால் என்ன பயன்?



கேணல் ஆர். ஹரிஹரன்

நான் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு ரய்பூர் நகரில் மையம் கொண்ட ஐ.ஐ.எம் என்று அழைக்கப்படும் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தில் மாணவர்களுக்கு தகவல்களை எப்படி மதிப்பீடு செய்வது என்பது பற்றி சில வகுப்புகளை எடுத்து வந்தேன். அதற்காக, சென்னையில் இருந்து மும்பாய் வழியாக விமானப் பயணம் அடிக்கடி மேற்கொள்வேன்.

ஒரு முறை அவ்வாறு பயணித்த போது மும்பாய் விமான நிலையத்தில் ஏறத்தாழ ஐந்து மணி நேரம் கழிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அரை உறக்கத்தில் நான் உட்கார்ந்திருந்த போது, எனது மனக்குதிரை கடந்த காலத்தை நோக்கி பயணித்தது.

நான் கடந்த காலத்தை எவ்வாறு கழித்தேன் என்று ஆழ்ந்து சிந்தித்தேன். அதில் சில அதிர்ச்சிகரமான உண்மைகள் தெரிய வந்தன. முதல் ஐந்தாண்டுகள் பெற்றோர், முக்கியமாக அம்மாவின் கட்டளையில் கழித்தேன். ஐந்தில் இருந்து பத்து வரை என்னுடைய உடன் பிறந்தோர் ஆளுமையின் தாக்கம் அதிகமாக இருந்தது. பத்து முதல் இருபது வரை நண்பர்கள் மற்றும் ஆசிரியர்கள் தாக்கம் அதிகமாயிற்று. இருபதில் இருந்து 60 வயது வரை நான் வேலை பார்த்த காலத்தில் எனக்கு சம்பளம் அளித்த நிறுவனங்களின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து வேலை செய்வதில் கழிந்தது.

அறுபது ஆண்டுகளில், நான் தூக்கத்தில் கழித்திருந்த 18 ஆண்டுகள் போக, 18 மாதங்கள் மற்றவர்களைக் காண மற்றும் ரயில், விமான நிலையங்களில் காத்திருப்பதில் கழித்திருக்கிறேன் என்று தெரிந்து என் மனம் நொந்தது. கூட்டிக் கழித்து பார்த்ததில், எனது 60 ஆண்டு வாழ்க்கையில் எனக்காகவே நான் கழித்த காலம் 12 ஆண்டுகள் மாத்திரமே. அதை பின் நோக்கிய போது, குடும்பம் மற்றும் நண்பர்கள் உறவினர்களுடன் கழித்த இன்பமான நாட்கள் நினைவுக்கு வந்தன. இந்த கடந்த கால மனப் பயணம் எனது வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

நான் வாழ்க்கையில் தவற விட்ட எனக்கு பிடித்த காரியங்கள் மட்டுமே இனி செய்வது என்று முடிவு எடுத்தேன். சென்னை மேலாண்மை கழகத்தில் நான் வகித்த இயக்குனர் பதவியை இராஜினாமா செய்தேன். அதன் பிறகு ஆங்கிலத்திலும் தமிழிலும் பாதுகாப்பு துறை மற்றும் தெற்காசிய நாடுகள் சார்ந்த என் கருத்துக்களை எழுத ஆரம்பித்தேன். தற்போது ஏறக்குறைய எனது ஆயிரம் கட்டுரைகளும் நேர்காணல்களும் பதிவாகி உள்ளன. ஆங்கிலத்தில் 14 புத்தகங்களில் எனது கட்டுரைகள் பதிவு பெற்றுள்ளன.

ஆனால் இந்த கட்டுரை எனது சாகசங்களை பற்றியது அல்ல. அதற்கு மாறாக, ஆங்கிலத்தில் Nostalgia என்று கூறப்படும் நமது கடந்த கால நினைவுகள் மற்றும் உணர்வுகள் நமது வாழ்க்கையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை பற்றியதாகும். நான் இந்த தலைப்பில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை படித்த பின் ஓரளவு ஏற்பட்ட தெளிவை வாசகர்களுடன் பங்கு பெறவே இந்த கட்டுரையை எழுதுகிறேன்.

மீண்டும் மீண்டும் தோன்றும் நமது கடந்த கால நினைவு கள் நம் நீண்ட கால நட்பையும் உறவுகளையும் எவ்வாறு பாதிக்கின்றன? இந்த கேள்வியை "அறிவாற்றல் மற்றும் மன எதிர்வினை" என்ற இதழில் பதிவாகி உள்ள ஒரு கட்டுரை ஆய்வு செய்கின்றது. அதன்படி, கடந்த காலத்தைப் பற்றி அதிகம் சிந்திக்கும் நபர்கள் அதிக நண்பர்களைக் கொண்டுள்ளனர் என்று ஒரு புதிய ஆய்வு கூறுகிறது. மேலும் காலப்போக்கில் அவர்கள் தங்கள் பழைய நட்புகளை புதுப்பிக்க கடந்த கால நினைவுகள் உந்துதலாக இருக்கலாம் என்றும் கூறுகிறது. அந்த ஆய்வை மேற்கொண்ட கியோட்டோ பல்கலைக்கழக ஆய்வு ஆசிரியரும் உளவியல் பட்டதாரி மாணவருமான குவான்-ஜூஹூவாங் அளித்த ஒரு செய்தி குறிப்பு, கடந்த காலத்தை பற்றி சிந்திப்போர் அவர்கள் வயதாகும்போது கூட அவர்களின் நட்புகளை நீடிக்க வாய்ப்புகள் அதிகம் என்று கூறுகிறது.



ஹூவாங்கின் கூற்றுப்படி, நீண்ட கால நட்புகள் நமது ஒட்டுமொத்த நல் வாழ்வை மேம்படுத்துகின்றன. அவை மகிழ்ச்சியான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ உதவுகின்றன. அந்த நட்பைப் பேணுவதில் கடந்த கால நினைவுகள் ஒரு பங்கைக் கொண்டிருந்தால், அதைவிடச் சிறந்ததாகும்.

நண்பர்களைக் கொண்டவர்கள் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் தங்கள் வாழ்க்கையில் அதிக திருப்தியுடனும் இருப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன. அவர்கள் நீண்ட காலம் வாழும் வாய்ப்புகள் அதிகம். நமக்கு வயதாகும்போது கடந்த கால நட்புகள் மங்கி விடுகின்றன. காலப்போக்கில் நம் நட்பை தக்க வைத்துக் கொள்ள எது நமக்கு உதவுகின்றது என்பதைப் புரிந்துகொள்ள, ஹூவாங்கும் அவரின் சகாவான நியூயோர்க் மாநில பல்கலைக்கழக பட்டதாரி மாணவர் யா-ஹூய் சாங் சேர்ந்து சுமார் 1,500 நபர்களிடயே ஒரு ஆய்வு நடத்தினர். அதன்படி, கடந்த காலத்தைப் பற்றி சிந்திக்கும் போக்கு அதிகம் உள்ள மக்களிடையே அவர்களின் நட்பை பராமரிக்கவும், நீண்ட காலத்திற்கு தக்க வைக்கும் திறன் அதிகமாக காணப்பட்டது.

எல் ஐ எஸ் எஸ் எனப்படும் சமூக அறிவியலுக்கான நீண்டகால இணைய ஆய்வுகள் கணக்கெடுப்பின் பதில்களில் ஹூவாங் மற்றும் சாங் தாங்கள் கண்டறிந்த முடிவுகளுக்கான கூடுதல் ஆதரவைக் கண்டறிந்தனர், அதன்படி, கடந்த கால நினைவுகளை கொண்ட பங்கேற்பாளர்கள் ஏழு ஆண்டுகளில் தங்கள் வலுவான சமூக உறவுகளை, மற்றவர்களை விட அதிகம் பராமரித்து வந்ததைக் காட்டியது.

நெதர்லாந்தில் பங்கேற்பாளர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட இந்த பதில்கள், அவர்கள் வயதாகும்போது அதிகம் கடந்த காலத்தை நினைவுகளை கொண்டவர்களாக மாறினர் என்று காட்டுகிறது. ஹூவாங் மற்றும் சாங்கின் ஆய்வுகள், கடந்த கால உணர்வுகள் எல்லா வயதினரிடமும், வெவ்வேறு அளவுகளில் காணப்படுவதாகக் கூறுகின்றன . "நடுத்தர வயதுடையவர்களை விட இளைஞர்கள் கடந்த கால உணர்வுகளை காட்டுவதற்கு சான்றுகள் உள்ளன. ஆனால், அதே நேரத்தில் வயதானவர்கள் வியக்கத்தக்க முறையில் அதிக அளவில் உணர்வுகளை காட்டுகிறார்கள் என்று ஹூவாங் தனது செய்திக்குறிப்பில் கூறினார்.

எந்த சூழ்நிலையிலும், வயது எதுவாக இருந்தாலும், நமது கடந்த கால உணர்வுகள் ஒரே சமூக விளைவுகளுடன் பிணைக்கப்பட்டுள்ளன. ஆகவே அதிக நண்பர்கள் அந்த நட்பை பராமரிக்க அதிக உந்துதல் அளிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படலந்த சித்திரவதை முகாமுக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கும் என்ன தொடர்பு?

## ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை கூறும் தகவல்கள்

ரஞ்சன் அருண் பிரசாத்

கடந்த 1980ஆம் ஆண்டு காலப்பகுதியின் இறுதி ஓரிரு வருடங்களில், அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் சித்திரவதை முகாம் தொடர்பில் தற்போது பாரிய சர்ச்சை தோன்றியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் இலங்கை ஜனாதிபதியும், 6 தடவை பிரதமராகவும் பதவி வகித்த ரணில் விக்ரமசிங்க, அல் ஜசீரா தொலைக் காட்சியில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டிருந்தார்.

இந்த நிகழ்ச்சியில் படலந்த சித்திரவதை முகாம் தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதை அடுத்தே, படலந்த சித்திரவதை முகாம் பேசுபொருளாக மாறியது.

படலந்த சித்திரவதை முகாம் தொடர்பில் நடத்தப் பட்ட படலந்த ஆணைக் குழுவின் விசாரணை அறிக்கை யுடன் தொடர்புபட்ட கேள்விகள் எழுப்பப்பட்டதைத் தொடர்ந்தே இந்த விடயம் பாரிய சர்ச்சையை நாட்டில் தோற்றுவித்துள்ளது.

படலந்த சித்திரவதை முகாம் தொடர்பான அறிக் கையை, அரசாங்கம் கடந்த மார்ச் 14ஆம் தேதி நாடா ளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவினால் இந்த படலந்த சித்திரவதை முகாம் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கை குறித்து நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பில் ஜனாதிபதி தலைமையிலான அமைச்சர வையினால் கொள்கை தீர்மானமொன்று எடுக்கப்பட் டுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறுகின்றார்.

'கடந்த 1988ஆம் ஆண்டின் தொடக்கம் 1990ஆம் ஆண்டில் சிவில் யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குற்றச் செயல்க ளில் படலந்த பகுதியில் நடத்திச் செல்லப்பட்ட பாரிய சித்திரவதை முகாம் தொடர்பில் நடத்தப்பட்ட ஜனாதி பதி ஆணைக்குழு விசாரணை குறித்து தற்போது உள் நாடு மற்றும் வெளிநாடுகளில் பேசப்பட்டு வருகின்றன" என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

இது குறித்து தொடர்ந்து அவர் பேசுகையில், '1977ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து, 1994ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆட்சி மாற்றத் தின் ஊடாக சட்டவிரோதமான, ஜனநாயக விரோத மான தன்னாட்சி அரசாங்கத்தை வீழ்த்தி 17 வருட சாபத் திலிருந்து நாட்டை மீட்டெடுத்து ஜனநாயகத்தை உறுதி செய்வதே நோக்கமாக அமைந்திருந்தது.

கடந்த 17 வருட காலப் பகுதியில் இடம்பெற்ற அரச பயங்கரவாதத்தில் கொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக் கான மக்களுக்கு நீதியை நிலைநாட்டுவதே நோக்கம். சூரியகந்த போன்ற மனித புதைகுழிகள் தொடர்பாகவும், படலந்த போன்ற சித்திரவதை முகாம்கள் தொடர்பாக வும் அப்போதைய தலைவர்கள் அந்தந்த இடங்களுக்குச் சென்று தகவல்களை வெளியிட்ட தருணத்தில் நியா யத்தை நிலைநாட்டிக் கொள்ளவே மக்கள் எதிர்பார்த் தார்கள்" என்றார்.

இதன்படி, 1995ஆம் ஆண்டு படலந்த வீடமைப்புத் திட்டத்தில் நடத்திச் செல்லப்பட்ட சட்டவிரோத சித் திரவதை முகாம் குறித்த விசாரணைகளை நடத்த அப் போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்கவின் நிர்வாகத்தால் உத்தரவிடப்பட்டது.


இந்த விசாரணைக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் காலப் பகுதிகள் பல தடவை நீடிக்கப்பட்டன. இந்த விசாரணைக் குழுவின் இறுதி அறிக்கை 1998ஆம் ஆண்டு மே 21ஆம் தேதி அந்த ஆணைக்குழுவின் செயலாளர் ஜி.கே.ஜி.பெரேராவினால் சமர்ப்பிக்கப்பட்டது என் றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் அமைக்கப்பட்ட படலந்த ஜனாதி பதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை 1998ஆம் ஆண்டு ஆணைக் குழுவினால் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப் பட்ட போதிலும், அந்த அறிக்கை கடந்த 14ஆம் தேதி வரை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

இந்த நிலையிலேயே, படலந்த சித்திரவதை முகாம் தொடர்பான பேச்சு மீண்டும் உருவெடுத்த பின்னணி யில், இந்த அறிக்கையைத் தற்போதைய அரசாங்கம் நாடாளுமன்றத்தில் கடந்த 14ஆம் தேதி சமர்ப்பித்திருந் தது.

'இந்தச் சம்பவம் இடம்பெற்று 35 வருடங்கள் கடந் துள்ள நிலையிலும், ஜனாதிபதி ஆணைக்குழு அமைக் கப்பட்டு 30 வருடங்களும், ஆணைக் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டு 25 வருடங்களும் கடந்துள்ள இந்தத் தருணத்தில் எமது கட்சி மற்றும் எமது அமைச்சரவை யினால் இந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப் பிப்பதற்கும் அதை மக்கள் மயப்படுத்துவதற்குமான பொறுப்பு நம்மிடம் உள்ளது" என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறுகின்றார்.






இந்த அறிக்கையை சட்ட மாஅதிபருக்கு அனுப்பி வைக்கவும், இந்த அறிக்கை தொடர்பிலான எதிர்கால நடவடிக்கைகள் குறித்த தீர்மானங்களை எட்டுவதற்கு ஜனாதிபதியினால் விசேட குழுவொன்று நியமிக்கப்ப டவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள படலந்த சித்திரவதை முகாம் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை தொடர்பான விவாதத்தை எதிர் வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் தேதி நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஏப்ரல் மாதம் 10ஆம் தேதி முற்பகல் 11.30 முதல் மாலை 5.30 வரை இந்த விவாதம் நடத்தப் பட இருப்பதுடன், இரண்டாம் கட்ட விவாதத்தை மே மாதத்தில் நடத்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

படலந்த ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கைப் படி, 1980ஆம் ஆண்டு காலப் பகுதியின் இறுதிக் கால கட்டத்தில், அப்போதைய அரசாங்கத்தினால் நடத்தப் பட்டதாகக் கூறப்படும் கொலைகள், சித்திரவதை முகாம்கள், சட்டவிரோத தடுத்து வைப்புகள் இடம் பெற்ற பகுதியாக படலந்த சித்திரவதை முகாம் கூறப்படு கின்றது.

கடந்த 1987-1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் படலந்த வீடமைப்பு திட்டத்திலுள்ள வீடுகளில் இந்த முகாம்கள் நடத்திச் செல்லப்பட்டதாகவும், இந்தப் பகுதியில் சட்டவிரோதமாக போலீஸ் அதிகாரிகளின் தலையீட்டில் பல்வேறு நபர்கள் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், கொலை செய்யப்பட்டதாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் 1995ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட படலந்த ஆணைக் குழுவின் விசா ரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சிக் காலத் தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் சித்திரவதைகள் மற்றும் கொலைகள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி மக்களுக்கான நியாயத்தைத் தமது அரசாங்கம் நிலைநாட்டும்" என்பது 1994ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் பிரதான தேர்தல் பிரசாரமாகக் காணப்பட்டது.

இதன்படி, படலந்த சித்திரவதை முகாம் மற்றும் சூரியகந்த மனித புதைகுழி தொடர்பில் அந்தக் காலப் பகுதியில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. 1994ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி பீடம் ஏறிய சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தனது ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தி, படலந்த சித்திரவதை முகாம் தொடர்பான விசாரணைகளுக்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை ஆட்சி பீடம் ஏறிய குறுகிய காலத்திலேயே ஆரம்பித்திருந்தார்.

இதன்படி, 1995ஆம் ஆண்டு இந்த ஜனாதிபதி ஆணைக்குழு, விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழுவின் ஆயுட்காலம் சுமார் 12 தட வைகளுக்கும் அதிக சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டது டன், இந்த ஆணைக்குழுவின் அறிக்கை 1998ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் தேதி அப்போதைய ஜனாதிபதி செய லாளரிடம் கையளிக்கப்பட்டு இருந்தது.

ஆணைக்குழுவின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் முன்னாள் அதிகாரியான சட்டத்தரணி எஸ். குணவர்தன செயற்பட்டிருந்ததுடன், அவர் தனது பதவியை ராஜினாமா செய்த பின்னணியில் பதில் செயலாளராக டேவிட் கீதனகே பணியாற்றியிருந்தார்.

அதன் பின்னரான காலத்தில் இந்த ஆணைக்குழுவின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் இரண் டாம் நிலை தரத்தைக் கொண்ட அதிகாரியான ஜீ.கே. ஜீ.பெரேரா பணியாற்றியுள்ளார்.

கடந்த 1998ஆம் ஆண்டு தனது பணிகளை நிறைவு செய்த ஆணைக்குழு, அந்த அறிக்கையை அதே ஆண்டு ஜனாதிபதியிடம் கையளித்திருந்த போதிலும், இந்த அறிக்கை கடந்த 14ஆம் தேதி வரை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

'கடந்த 1988ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி முதல் 1990ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதி வரை அரச உர கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான படலந்த வீடமைப்புத் திட்டத்தில் நடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் சட்டவிரோதமான சித்திரவதை முகாமில் நபர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார்களா? சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டார்களா? அதற்குப் பொறுப்பு கூறவேண்டிய நபர்கள் யார்?' என் பவை உள்ளிட்ட ஐந்து விடயங்கள் குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பு இந்த ஆணைக்குழுவிடம் கைய ளிக்கப்பட்டிருந்தது.

இந்த ஆணைக்குழுவின் பகிரங்க விசாரணைகள் கொழும்பு புதுக்கடை நீதிமன்ற கட்டடத் தொகுதியின் 2ஆம் இலக்க மேல் நீதிமன்ற வளாகத்தில் 1996ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டதுடன், இந்தக் கூட்டம் தொடர்ச்சியாக 127 நாட்கள் இடம் பெற்றது.

இந்த விசாரணைகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரபல தலைமைகளான ரணில் விக்ரமசிங்க, ஜோசப் மைக்கல் பெரேரா, ஜோன் அமரதுங்க உள்ளிட்ட 82 பேரிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தின் பிய கம தேர்தல் தொகுதியில் படலந்த பகுதி அமைந்துள் ளது. இந்த படலந்த பகுதியில் இலங்கை உர கூட்டுத் தாபனத்திற்குச் சொந்தமான வீடமைப்பு திட்டமொன்று அமைக்கப்பட்டிருந்தது.

(மிகுதி நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வியுக்தியார் பதில்கள்

**சிவபாலன் செந்துஜன்,**
**கதிரேசு வீதி, வவுனியா.**

**கேள்வி:** இலங்கையின் வளர்ச்சியில் இந்திய ஆதரவின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "புதுடில்லியின் உதவி நிராகரிக்கப்பட்டால் இலங்கை வளர்ச்சி அடையாது", என்று கூறியுள்ளாரே. "இந்தியாவின் ஆதரவு நிராகரிக்கப்பட்டால் இலங்கை வளர்ச்சி அடையாது. 2050ஆம் ஆண்டு இன்னும் ஏழ்மை நிலைக்கே தள்ளப்படும். இந்தியா நமது நெருங்கிய அயல் நாடு. அது அமெரிக்கா, ரஷ்யா அல்லது சீனா அல்ல. எனவே, இலங்கை செய்யவேண்டி யது இந்த உறவை சிறப்பாக பயன்படுத்துவதாகும். இலங்கை தனது வேலையை இந்தியா மூலம் செய்ய வேண்டும்." என்று ரணில் விக்கிரமசிங்க நீண்ட உபதேசம் செய்திருக்கிறாரே. இந்தியாவின் எந்த உதவியை இலங்கை நிராகரித்தது என்று சொல்லவில்லையே. உங்களுக்காவது அது என்ன என்று தெரியுமா?




**வியுக்தியார்:** அவர் சொல்கின்ற உபதேசம் எல்லாம் சரியானதுதான். ஆனால், நீங்கள் சொல்வதுபோல இந்தியாவின் எந்த உதவியை இலங்கை நிராகரித்தது என்பதுதான் நமக்கும் தெரியவில்லை. சிலவேளை அவரது ஆட்சிக்காலத்தில் இந்திய கோடீஸ்வர வர்த்த கர் அதானியுடன் செய்துகொண்ட காற்றலை மின்உற் பத்தி திட்டத்தை இந்த அரசாங்கம் மறுபரிசீலனை செய்ததைச் சொல்கிறாரோ தெரியவில்லை. ரணில் ஜனாதிபதியாக இருந்தபோது செய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் நமது நாட்டில், இயற்கை வளமான காற்றைப் பயன்படுத்தி பெறப்படும் மின்சாரத்தை, அதிக விலைகொடுத்து நமது மின்சாரசபை வாங்குவ தற்கே ஒப்பந்தம் செய்யப்பட்டது என்று ஆரம்பம் முதலே பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்து வந்தனர். அப்போது எதிரணியில் இருந்த தேசிய மக்கள் சக்தியும் அதனைக் கண்டித்திருந்தது. இப்போது ஆட் சிக்கு வந்ததும் அந்த ஒப்பந்தத்தை மாற்றியமைக்க கோரிக்கை விடுத்தது. அதனால் அந்த திட்டத்திலிருந்து அதானி நிறுவனம் பின்வாங்கிவிட்டது. இதனைத்தான் ரணில் இந்திய உதவி என்கிறாரோ தெரியவில்லை. ஒரு அரசாங்கம் ஒரு ஒப்பந்தத்தைச் செய்த பின்னர் இன்னு மோர் அரசு வந்ததும் அதனை ரத்துச் செய்வதும், இது போன்ற முதலீடுகள் நாட்டுக்கு வருவதை தடுத்துவிடும் என்பதையும் நாம் கவனிக்கத்தான் வேண்டும்.

---

**ப. அபிஷேக்குமார்,**
**எல்லை வீதி, மட்டக்களப்பு.**

**கேள்வி:** 'வடக்கு-கிழக்கு மக்களின் மனநிலை மாறாது. உள்ளூராட்சிசபைத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தியையே அவர்கள் ஆதரிப்பார்கள் என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளாரே. பாராளுமன்ற தேர்தலில் அனுர அலை காரணமாக அவர்கள் வெற்றி பெறமுடிந்தது. ஆனால் உளளூராட்சி தேர்தல் என்பது உள்ளூர் பிரமுகர்களிடையே யான போட்டிதானே. அதிலும் அநுர அலை வேலை செய்யும் என்று நீங்களும் நம்புகின்றீர்களா?



**வியுக்தியார்:** நான் நம்புவது இருக்கட்டும், அவர்க ளின் பிரதான போட்டியாளர்களான இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச்செயலாளரான சுமந்திரன் கூட, அனுர அலையை குறைத்து மதிப்பிட முடியாது என்று கூறிவிட்டரே. அவர் அவ்வாறு கூறியதுகூட, தாம் தோல்வியடைந்தால், அனுர அலையால்தான் தோற்றோம் என்று கூறலாம் என்ற ஒரு முன் எச்சரிக்கை என்றுதான் நான் நம்புகின்றேன். 'கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அனைத்து சபைகளுக் கும் நாம் போட்டியிடமுடியாத சூழ்நிலை காணப்பட் டது. இம்முறை அனைத்து சபைகளுக்கும் போட்டியிடு கின்றோம். இதுகூட ஆரம்ப கட்ட வெற்றியே" என்றும் ரில்வின் சில்வா கூறியிருப்பதையும் கவனித்திருப்பீர்கள் என்று நினைக்கின்றேன். தமிழ் கட்சிகளின் வேட்பு மனுக்கள் பல நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அதுகூட அவர்களுக்கு சாதகமானதாக அல்லவா தெரிகின்றது.

---

**அ. சிவகணேஸ்,**
**சங்கரத்தை, வட்டுக்கோட்டை.**

**கேள்வி:** பிரிவினைவாத புலம்பெயர்ந்தோர் முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு மிகவும் சுறுசுறுப்பாகவும், மூலோபாயரீதியாகவும், விடாமுயற்சியுடனும் உள்ளனர் என்பதை பிரிட்டனின் தடை அறிவிப்புகள் வெளிப்படுத்துவதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளாரே.



**வியுக்தியார்:** 'காகம் இருக்க பனம்பழம் விழுந்ததாக" சொல்லப்படும் கதை அறிந்திருப்பீர்கள் என்று நினைக்கின்றேன். அதாவது தானாக விழுவதற்கு தயாராக இருக்கும் பனம்பழம் ஒன்றின் மீது காகம் இருந்ததும் விழந்துவிடுகின்றது. ஆனால் காகம் இருந்ததால்தான் அது விழுந்தது என்பதுபோலத்தான் இது. புலம் பெயர்ந்தவர்கள் குழுக்கள் எல்லாம் தாயகத்தில் எவரைத் தலைவராக்கலாம் என்று தெரியாமல், தடுமாறிக்கொண்டல்லவா இருக்கின்றன. அவர்கள் விடா முயற்சியும் மூலோபாயரீதியான செயற்பாடுகளாலும்தான், யாழ்ப் பாணத்தில் ஒருவர் தலைவராகி, முழு மக்களுக்கும் 'பெருமையை" ஏற்படுத்தியிருக்கிறார். அவர்களின் முயற்சியால்தான் பிரிட்டன் தடை அறிவிப்பு என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சரின் கூற்று, அவர் மீதான மதிப்பைத்தான் கேள்விக்கு உள்ளாக்கியிருக்கின் றது. அவர் இந்த அரசியலுக்கே வராமல் தனது சட்டத் தொழிலுடன் நின்றிருக்கலாமோ?.

---

**ஆர். புஸ்பகாந்த்,**
**2வது ஒழுங்கை, தெகிவளை.**

**கேள்வி:** மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டிருந்தால் இராணுவத்தினராக இருந்தாலும் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும், இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்று வன்னி இறுதிப் போரை வழிநடத்திய இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியுள்ளதுடன், இவ்வாறான குற்றச்சாட்டுகள் தொடர்பில்தான் இராணுவத் தளபதியாக இருந்த காலத்திலேயே ஜகத் ஜெயசூரியவுக்கு எதிராக விசாரணை களை ஆரம்பித்திருந் தார் என்றும் அவர் தெரிவித்துள்ளாரே. ஆனால் அவர் அந்த விசாரணைக்கு என்ன நடந்தது என்பது பற்றி எதுவும் சொல்லவில்லையே.



**வியுக்தியார்:** உண்மைதான், சரத் பொன் சேகா இராணு வத்தள பதியாக இருந்த போது, ஜகத் ஜெயசூரிய வன்னி கட்டளைத்தளபதியாக இருந்த இறுதி யுத்தம் நடந்தபோது அவர் முன்வரிசையில் நின்று போரிடவில்லை என்று கூறியிருக்கும் சரத் பொன்சேகா, பின்வரிசையில் இருந்தவர்கள் ஏதேனும் தவறிழைத்திருந்தால் அவர்கள் விசாரிக்கப்படவேண்டும் என்றும் கூறியிருக்கிறார். இதில் வேடிக்கை என்னவென்றால், பின்விசையில் நின்ற இவர் தவறிழைத்திருந்தால் தண்டிக்கப்படவேண்டும் என்று கூறியிருப்பவர், போரில் முன்வரிசையில் நின்ற சவேந்திர சில்வா தவறிழைக்கவில்லை என்கிறார். அது வேறு ஒன்றும் இல்லை, இவர் அரசியலுக்கு வந்த பின்னர், அவர் தளபதியாக இருந்த போது குற்றம் இழைத்தார் என்று ராணுவ நீதிமன்றம் அமைத்து அவரை குற்றவாளியாக இரண்டு ஆண்டுகள் சிறையில் அடைத்தவர் அப்போதைய தளபதி ஜகத் ஜெயசூரியதான். அதனால்தான் இவர் அவரை குறி வைக்கிறாரோ தெரியவில்லை.

---

**கே. ராம்குமார்,**
**பிள்ளையார் கோவிலடி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** இலங்கையில் இடம்பெற்ற 30 ஆண்டு கால கொடூர யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவந்த, முன்னாள் படை வீரர்க ளுக்கு எதிராக பிரித்தா னியா தடை விதித்துள் ளது என்றும் ஆனால் அப்பாவி பலஸ்தீனியர் களை கொன்று குவிக்கும் இஸ்ரேல் இராணுவத்துக்கு பிரித்தானியா ஆதரவளித்து வருகிறது என்றும் அவ்வாறெ னில் இலங்கை இராணுவத்துக்கொரு நீதி, இஸ்ரேல் இராணுவத்துக்கு இன்னொரு நீதியா என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கேள்வி யெழுப்பியுள்ளாரே?



**வியுக்தியார்:** அவர் மட்டுமல்ல, இதே கருத்தை தெற்கில் பலரும் எழுப்பியுள்ளனர். இதன்மூலம் அவர் கள் ஒரு விடயத்தை தெளிவாக தெரிவித்துள் ளனர். பாலஸ்தினத்தில் இஸ்ரேல் ராணுவம் இனப்படு கொலையை நடாத்திவருகின்றது என்பதும், அங்கு இந்த உலகமே வெட்கித் தலைகுனியும் அளவிற்கு மனித உரிமை மீறல்கள் நடக்கின்றன என்பதும் பகிரங்கமானவைதான். அவர்களை ஒருமாதிரியும் இலங்கை படையினரை வேறு மாதிரியும் பிரிட்டன் ஏன் நடத்துகின்றது என்று அவர்கள் கேட்பதன் மூலம் இலங்கைப் படையினரும் தவறுசெய்தனர் என்பதையல்லவா இவர்கள் மறைமுகமாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

---

**நடராஜா ரவீந்திரன்,**
**பாசையூர், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** தையிட்டியில் மக்களின் காணிக்குள் சட்டவிரோதமாக கட்டப்பட்டது என்று கூறப்படும் திஸ்ஸ விகாரை அமைந்துள்ள வளாகத்துக்குள் புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடம் கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து காணி உரிமையாளர்களும் அப்பகுதி மக்களும் அரசியல் தரப்பினரும் போராட்டத்தில் ஈடுபட்டனரே. ஏற்கனவே விகாரை கட்டப்பட்டதே சட்டவிரோதமானது என்று நாம் போராடிக்கொண்டிருக்க அவர்களோ மற்றுமொரு கட்டிடத்தைக் கட்டியிருக்கிறார்கள் என்றால், அதனை எவ்வாறு கருதுவது?

**வியுக்தியார்:** உண்மைதான், ஏற்கனவே விகாரை கட்டப்பட்டதே சட்டவிரோதானது என்று நாம் போராடிக்கொண்டிருக்க, மற்றுமொரு கட்டடம் என்பது அடாவடித்தனமானதுதான். ஆனால், ஜெர்மனியில் கட்டிடக்கலைதான், புதிதாக ஒரு வீட்டை கட்டி முடித்துவிட்டு அதனை அப்படியே தூக்கிச் சென்று வேறுஇடத்தில் வைக்கின்ற தொழில்நுட்பம் இருப்பதாக அறிந்திருக்கின்றேன். ஆனால் நமது நாட்டிலும் அதுகும் தையிட்டியிலும் செய்யமுடிகின்றது என்பது ஆச்சரியமானதுதான். ஒவ்வொரு போயா தினத்திலும் நமது முன்னணியினர் அந்த விகாரையில் போராட்டம் நடாத்திக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் கண்களுக்கு தெரியாமல் ஒரு கட்டிடம் கட்டப்பட்டிருக்கின்றது என்றால், ஜெர்மனியில் போல எங்கோ வைத்து கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்தை இங்கே கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கவேண்டும். அல்லது வழக்கம் போல கட்டி முடியும்வரை அவர்கள் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு இப்போது அதற்கு எதிராக குரல கொடுக்க வேண்டும். எதுவோ விகாரையை இனி இடிக்கப்போவதில்லை என்று அவர்கள் முடிவெடுத்து விட்டார்கள் என்றே தெரிகின்றது. இனி என்ன சமஷ்டித் தீர்வுக்காக போராடிக்கொண்டிருப்பதுபோல விகாரைக்கு எதிராகவும் போயா தினத்தில் கூடிக்கலையவேண்டியதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீழ்ச்சியுறும் உலக ஊடக சுதந்திரம்: அமெரிக்க குரலை (VOA) மூடும் டிரம்ப்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

உலகெங்கும் அமெரிக்காவின் நலன்களை பாதுகாக்கும் ஊடகமான 'வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா' செய்தி நிறுவனத்தை மூட ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அமெரிக்க அரசின் நிதியுதவி பெற்ற செய்தி நிறுவனமான வாய்ஸ் ஆஃப் அமெரிக்காவை ட்ரம்புக்கு எதிரானது மற்றும் தீவிரமானது என்று குற்றம் சாட்டி, அதை முடக்குவதற்கான உத்தரவில் கையெழுத்திட்டுள்ளார்.

இதேவேளை உலகின் அனைத்து பாகங்களிலும் தொடர்பூடக சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் அதிகரித்து வருவதாக சுயாதீன கண்காணிப்புக் குழுவின் கணிப்பீடு அண்மையில் தெரிவித்துள்ளது. கடந்த பல வருடங்களாக தொடர்பூடக சுதந்திரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்து வருவதாக வாஷிங்டனை தளமாகக் கொண்டு செயற்படும் அமைப்பு கூறியுள்ளது.

ஒரு காலத்தில் தங்கள் பிரச்சார நலனுக்காக பயன்படுத்திய ஊடகங்களை இப்போது அந்த நாட்டின் அரசே முடக்குவது என்பது இந்த ஊடகங்களின் நம்பகத் தன்மையை இலகுவாக அறிந்து கொள்ளலாம்.

உலகின் அனைத்து பாகங்களிலும் தொடர்பூடக சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் அதிகரித்து வருவதாக சுயாதீன கண்காணிப்புக் குழுவின் கணிப்பீடு அண்மையில் தெரிவித்துள்ளது.

உலகில் சராசரியாக 6 பேர்களில் ஒருவர் மாத்திரமே தொடர்பு சாதன சுதந்திரத்துடன் இருப்பதாகவும் அது கூறப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் தொடர்பூடகங்கள் செயற்படுகின்ற அரசியல் மற்றும் சட்ட சூழ்நிலை குறித்து இந்த அமைப்பு ஆராய்ந்து வருகிறது.

தொடர்பூடகங்கள் எதிர்கொள்கின்ற பொருளாதார அழுத்தங்கள் குறித்தும் அது கவனம் செலுத்துகிறது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு நாடும் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.


இந்த பட்டியலை அடிப்படையாக கொண்டு பார்க்கும் போது உலக மட்டத்தில் கடந்த வருடத்தில் மீண்டும் ஊடக சுதந்திரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை தெரியக் கூடியதாக இருக்கின்றது என்று அந்த அமைப்பு கூறுகின்றது.

மிகவும் முக்கியமான மாற்றம் என்பது சகாராவுக்கு தென்பகுதியில் உள்ள ஆபிரிக்க நாடுகளில்தான் நடந்துள்ளது. மெக்சிகோவில் ஊடக சுதந்திரம் கிடையாது என்ற நிலை எட்டப்பட்டுள்ளதுடன், இலத்தின் அமெரிக்கா குறித்தும் கவலைகள் அதிகரித்துள்ளன.

ஹொண்டியூரஸூம் ஊடக சுதந்திரம் அற்ற நாடாகவே கணிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக செய்தியாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்கு முறையின் காரணமாக தனது பிராந்தியத்தில் ஊடக சுதந்திரம் பெரும் வீழ்ச்சியடையும் நாடாக ஈரான் பதிவாகியுள்ளது.

ஆசிய பசுசிபிக் பிராந்தியத்தில், குறிப்பாக பூட்டான்




மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகளில் ஊடக சுதந்திரத்தை பறிக்கும் நகர்வுகள் குறித்தும் இந்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

பேச்சுச் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் மற்றும் கட்டுப்படுத்தப்படாத கருத்துப் பரிமாற்றம் ஆகிய விடயங்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டிய அவசியம் உள்ளது என்றும் இந்த அமைப்பு வலியுறுத்துகிறது.

இதேவேளை அமெரிக்காவில் வரி செலுத்துவோர் இனி தீவிர பிரச்சாரத்திற்கு அடிமையாகாமல் இருப்பதை உறுதி செய்யும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. அமெரிக்காவில் அரசியல்வாதிகள், முக்கிய தலைவர்களை விமர்சிக்கும் ஊடகங்களின் நிலை தற்போது மிகவும் மோசமாகி உள்ளது

சர்வதேச அரங்கில் அமெரிக்காவின் முதன்மையன ஊடக சேவையாக இருக்கும் வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா, இரண்டாம் உலகப் போரின் போது ஜேர்மனிய நாஜி பிரச்சாரத்தை எதிர்க்க உருவாக்கப்பட்டது.

இந்த ஊடக நிகழ்ச்சிகள் மூலமாக தற்போது உலகளவில் ஒவ்வொரு வாரமும் கோடிக்கணக்கான மக்களைச் சென்றடைகிறது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


வாய்ஸ் ஆஃப் அமெரிக்காவின் ஊடக இயக்குனர் மைக் அப்ரமோவிட்ஸ், தனது நிறுவனத்தின் 1,300 பேர் கொண்ட அவரது முழு ஊழியர்களும் ஊதியத்துடன் கூடிய விடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

இன்று அமெரிக்காவுடன் பகைமையை கொண்டுள்ள ஈரான், சீனா மற்றும் ரஷ்யா போன்றவை அமெரிக்காவை இழிவுபடுத்துவதற்காக தவறான கதைகளை உருவாக்குவதில் பில்லியன் கணக்கான டாலர்களை செலவழித்து வருகின்றன என்று அப்ரமோவிட்ஸ் குறிப்பிட்டுள்ளார். இந்த மூடும் உத்தரவு வாய்ஸ் ஆஃப் அமெரிக்காவை அதன் முக்கியமான பணியைச் செய்ய முடியாமல் செய்துள்ளது என்று கூறப்படுகிறது.

இந்த புதிய உத்தரவால் சுதந்திரமான பத்திரிகைக்கான அமெரிக்காவின் நீண்டகால உறுதிப்பாட்டைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்று அமெரிக்க தேசிய பத்திரிகையாளர் மன்றம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த விவகாரம் ஒரு முழு செய்தி அறையை யும் ஒரே இரவில் ஓரங்கட்ட முடிந்தால், அது பத்திரிகை சுதந்திரத்தின் நிலையைப் பற்றி என்ன ஆகும் என்று தெரியவில்லை. இந்த மூடு விழா வாய்ஸ் ஆஃப் அமெரிக்காவில் சுயாதீன ஊடகத்தின் எதிர்காலத்தை ஆபத்தில் ஆழ்த்தும் ஒரு அடிப்படை மாற்றமாகும் என்று இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

சுதந்திரமான பத்திரிகை என்பது ஒரு அரசின் எதிரி அல்ல என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும். ஒரு மீண்டெழும் தன்மையுள்ள மற்றும் செழிப்பான சமுதாயத்திற்கு வழி வகுக்கும் ஆட்சியாளர்களின் மிகப் பெரிய நண்பர்களுள் ஒன்றாகும். இணைய அணுகலைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் உள்ளடக்கத்தை தணிக்கை செய்வதன் மூலமும் பொதுமக்களிடமிருந்து தகவல்களைத் தடுக்கும் முயற்சிகளை அரசாங்கங்கள் தீவிரப்படுத்தி வருகின்றன.




அதற்கெதிராக மக்கள் குரல்கொடுக்க வேண்டும். கருத்துச் சுதந்திரம், புத்தாக்கம் மற்றும் தனியுரிமை ஆகியவற்றில் அது ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான விளைவுகள் குறித்து மனித உரிமைகள் அமைப்புகள் நீண்ட காலமாக கவலை தெரிவித்தது வருகின்றன.

அதிபர் ட்ரம்பின் உயர் ஆலோசகருமான எலோன் மஸ்க், தனது சமூக ஊடக தளமான எக்ஸ் ஐப் பயன்படுத்தி வாய்ஸ் ஆஃப் அமெரிக்காவை மூட வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி வீடற்றவர்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் நூலகங்களுக்கு நிதியளிப்பது உட்பட பல பொது நிறுவனங்களுக்கான நிதியையும் குறைத்து உள்ளார்.

அமெரிக்காவின் பிரதான ஊடகங்கள் தனக்கு எதிராகவும், பாரபட்சமாக இருப்பதாக ஜனாதிபதி தொடர்ந்து கூறி வந்துள்ளார். அதே வேளை ட்ரம்ப் தனது முதல் பதவிக்காலத்தில் வாய்ஸ் ஆஃப் அமெரிக்காவை கடுமையாக விமர்சித்தார். இந்நிலையில் அதிபர் ட்ரம்ப் ஒரு உரையின் போது அவர் **CNN** மற்றும் **MSNBC** நிறுவனங்களை ஊழல் நிறைந்தவை என்றும் குறிப்பிட்டுள்ளார். ●

# மியன்மாரில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழப்பு!

மியான்மரின் மையப் பகுதியை தாக்கிய நிலநடுக்கத்தைத் தொடர்ந்து இதுவரை 144 பேர் உயிரிழந்துள்ளனர், 732 பேர் காயமடைந்துள்ளனர். இந்த எண்ணிக்கை மியான்மரின் ராணுவ தலைவர் மின் ஆங் ஹெலாய்ங்கிடமிருந்து வந்தது.

தாய்லாந்தில், ஒரு பெரிய கட்டடம் சரிந்து விழுந்ததில் மூன்று பேர் உயிரிழந்தனர். நில நடுக்கம் சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளிலும் உணரப்பட்டது.

சமூக ஊடகங்களில் வெளியான காணொளிகளில் பாங்காக்கில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி தெருக்களில் தஞ்சமடைந்தனர்.

அமெரிக்க புவியியல் ஆய்வு மையத்தின் கூற்றின்படி, நிலநடுக்கத்தின் மையப்புள்ளி பர்மிய நகரான சர்காயிங்ன் வடமேற்கில் 16 கிலோமீட்டரில், அமைந்திருந்தது. இந்த பகுதி தலைநகர் நேபிடோவிற்கு வடக்கே சுமார் 100 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

மியான்மரில் முதல் நிலநடுக்கம் ஏற்பட்டு 12 நிமிடங்களே ஆன நிலையில், மற்றொரு நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இரண்டாவது ஏற்பட்ட நிலநடுக்கம் 6.4 ஆக பதிவானது. இதன் மையம், சர்காயிங்கிற்கு தெற்கே 18 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

நேபிடோவில் சாலைகள் சிதைந்திருப்பதை படங்கள் காட்டுகின்றன. நாட்டின் ராணுவ அரசு ஆறு பகுதிகளில் அவசர நிலையை பிரகடனப்படுத்தியிருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

தாய்லாந்து தலைநகர் பாங்காங்கில் ஒரு கட்டடத்தின் கூரை மீது இருந்த தண்ணீர் தெறித்து பல தளங்களை தாக்கி இறுதியாக கீழே தெருக்களில் ஊற்றியது.

பாங்காக்கில் இருந்து நூற்றுக்கணக்கான மைல்கள் தொலைவில் உள்ள முழுமையாக கட்டி முடிக்கப்படாத 30 மாடி கட்டடம் ஒன்று இடிந்து விழுந்தது.

இதில் சிக்கிக்கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 70 ஆக உயர்ந்துள்ளதாக தாய்லாந்தில் உள்ள தேசிய அவசர கால மருத்துவ சேவை மையம் தெரிவித்துள்ளது. முன்னதாக 43 பேரை காணவில்லை என தெரிவித்திருந்தது.


கட்டடம் இடிந்து விழுந்தபோது சுமார் 320 தொழிலாளர்கள் அந்த இடத்தில் இருந்ததாகவும், மின் தூக்கியில் 20 பேர் சிக்கிக்கொண்டிருப்பதாகவும் முகநூல் பதிவொன்றில் தெரிவித்திருந்தது.

உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை குறித்து தெளிவில்லாத நிலையில், சம்பவ இடத்திலேயே ஒரு கள மருத்துவமனை அமைக்கப்பட்டு மீட்புப் பணியாளர்கள் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மியான்மரின் மண்டலேவில் இருக்கும் மீட்புக் குழுவைச் சேர்ந்த ஒருவர் சேதம் மிகப் பெரியது என தெரிவித்தார்.

'உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் மிகவும் அதிகம். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடந்துகொண்டிருப்பதால் இப்போதைக்கு எங்களால் இவ்வளவுதான் சொல்லமுடியும்," என்று அவர்கள் கூறுகின்றனர்.

'உயிரிழந்தவர்கள் எவ்வளவு பேர் என்பது சரியாக இன்னமும் தெரியவில்லை. ஆனால் பல நூறு பேர் இறந்



திருப்பார்கள்"

மியான்மரின் மிகப்பெரிய நகரான யாங்கானில் வசிக்கும் சோ லிவின் நிலநடுக்கத்தை நீண்ட நேரம் உணர்ந்ததாக தெரிவித்தார்.

நாட்டின் முன்னாள் தலைநகரான இந்த நகரில் பரவலாக சேதம் ஏற்பட்டதாக தெரியவில்லை என அவர் தெரிவித்தார். எதிர்வரும் நாட்களில் இதைவிட பெரிய நிலநடுக்கம் ஏற்படுமோ என மக்கள் அச்சத்தில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்ட பின்னர் மியான்மரின் மண்டலே விமானநிலையத்தில் எடுக்கப்பட்டதாக தோன்றும் உறுதிசெய்யப்படாத காணொளி வெளியாகியுள்ளது.

அதில் மக்கள் கூச்சலிட்டுக்கொண்டு தார்சாலையில் அமர்ந்திருக்கின்றனர். பின்புலத்தில் ஜெட்விமானம் ஒன்று காணப்படுகிறது.

'அமருங்கள், ஓடாதீர்கள்" என்ற குரல்கள் எழுவதை கேட்கமுடிகிறது.

ஆன்லைனில் வெளியாகும் வீடியோக்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்ய முயற்சி செய்துகொண்டிருக்கிறது.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர் சடையம்மா சுவாமிகளுக்கு...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

முற்றும் துறந்த ஞானி ஆகினார். இந்நிலையில் அடிக்கடி தலை வீங்கும். இவரின் யோகம் அடங்க தலை வீக்கம் குறையும். இந்நிலையில் தலைமுடி நீண்டு நிலத்தைத் தொடும் அளவு வளர்ந்து சென்றதால் அடியவர்கள் இவரை சடையம்மா என அழைத்தனர். காரைக்கால் அம்மையாரைப் போலவே பிற்காலத்தில் வெண்ணிற ஆடை தரித்து தலைவிரி கோலமாக பூமியைத் தொட்ட தலைமுடியுடன் அடியவர் பலருக்கும் அருளாசி வழங்கினார். மன ஒருமைப்பாட்டுடன் கடையிற் சுவாமியின் குருவுபதேசமாகிய 'கந்தனை மறவாதே அவனே நமது சொந்தம்" என்பதை ஏற்று முருக பக்தையாகினார். மன ஒருமைப்பாட்டின் இறுதிநிலை சமாதியாகும் இந்நிலையில் பக்குவப்பட்ட ஆன்மா பூரணத்துள் கலந்து ஒன்றாகிவிடும். இந்நிலை கைவரப்பெற்ற இவர் சித்தர் பரம்பரையுள் ஒன்றாகினார்.

இவர் தனது சித்தத்தை சிவன்பால் வைக்க ஏற்ற புண்ணிய இடமாக கீரிமலை எனும் நகுலேஸ்வரத்தை தெரிவு செய்து அங்கே மடம் அமைத்து அங்கே தங்கி இருந்து பணியாற்றத் தொடங்கினார். ஆன்மீக உயர் இடமாகிய இவ்விடத்திலே கடல் அலை மோதும் பிதிர்க் கடன் நிறைவேற்றும் இடம் என்பன ஒருங்கே அமைந்த சிறிய மலையிலே தங்கி சித்தர்கள், ஞானிகளின் ஆன்மீக தேடலுக்குரிய இடமாக்கினர். நந்தவனம் அமைத்தார். இப்பணியை நல்லூர் ஆலயம், நல்லூர் சட்டநாதர் ஆலயம், திருநெல்வேலி வாலையம்மன் ஆலயம் போன்றவற்றிலும் மேற்கொண்டார். இத்தனை சிறப்புமிக்க இவர் 1936ஆம் ஆண்டு சுக்கிரவார அனுச சட்சத்திரமன்று தான் ஏற்கனவே கூறியபடி உச்சி வீங்கி தலை பிளந்து சமாதியானார். இவரின் சமாதியானது யோகர் சுவாமிகளின் தலைமையிலே கீரிமலையிலே கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு நிலத்தின் கீழே உள்ள நிலக்கீழ் அறையில் சமாதி வைக்கப்பட்டது. இவரது சடையின் ஒரு பகுதி எடுக்கப்பட்டு கதிர்காமம், திருச்செந்தூர் ஆகிய இடங்களில் சமாதி வைக்கப்பட்டது.

இவரின் சமாதிக்கு மேலாக கிழக்கு திசை நோக்கி சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. வடக்கு நோக்கி அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இவரது சமாதிக்கு அருகே குழந்தைவேல் சுவாமிகளது சமாதி அமைக்கப்பட்டுள்ளது. தற்போது உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள இவரது சமாதியானது எவ்வித சேதமின்றி அப்படியே காட்சியளிக்கிறது. இவரது சமாதியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட திருவுருவ சிலைகள் பாதுகாப்பாக ஓரிடத்திலே இருப்பதாக அறிய முடிகின்றது. இவரது மடங்கள் இயங்க முடியாமலும், பெயர் மறைக்கப்பட்டும், அழிக்கப்பட்டுமுள்ளன. இது சைவத்தமிழ் உலகுக்குப் பெரும் இழுக்கானது. இந்நிலையில் நல்லூர் சடையம்மா மடத்திலே பணியாற்றிய பௌராணிகர் சி. தம்பிஐயா அவர்களால் 1975ஆம் ஆண்டளவில் அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்திலே கொட்டகை அமைத்து அவரின் பணிகளை ஆற்றி 63 மெய்யடியார்களதும் 9 தொகை அடியார்களதும் குருபூசைகளை நடத்தி வந்தார். இக்கைங்கரியம் கைகூடவே வளர்ச்சியடைந்து 2000ஆம் ஆண்டு இந்த மடம் விஸ்தரிக்கப்பட்டு 63 அடி நீள மடம் அமைத்து சின்னத் தலைமை வாத்தியார் எனப்பட்ட ச. நடராசா வாத்தியாரால் திறந்து வைக்கப்பட்டது.

நாளொரு வண்ணமும் இப்பணி வளர்ச்சியுற்று 2025 ஆம் ஆண்டிலே லிங்கம் அறக்கட்டளை ஸ்தாபகரது பேருதவியால் முதன் முதலில் சடையம்மாவிற்கு ஆலயம் அமைக்கப்பட்டு சடையம்மா அவர்களது சமாதி மண் எடுத்துவரப்பட்டு அதன்மீது சடையம்மா சுவாமிகளின் கருங்கல்லினாலான திருவுருவச் சிலையையும் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது. இவரது வாழ்க்கை வரலாறு உள்ளடக்கிய சமாதிப்பாக்களை சரவணையைச் சேர்ந்த ஆ. தில்லைநாதபிள்ளை என்பவர் 1957ஆம் ஆண்டிலே பண்டிதர் சோ. சபாபதிப்பிள்ளை அவர்களது முகவுரையுடன் திருச்செந்தூர் ஆ. நெல்லை வடிவேற்பிள்ளை அவர்களின் அணிந்துரையுடனான 60 பாக்கள் கொண்ட சிறுநூலை வெளியிட்டுள்ளார். ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களும் ஈழத்து சித்தரில் ஒருவராக சடையம்மாவை குறிப்பிட்டு நூல் எழுதி உள்ளார்.

இவ்விரு ஆக்கங்களையும் மற்றும் பேராசிரியர் மா. வேதநாதன் உடைய ஆய்வுக்கட்டுரையையும் கலாநிதி எஸ். பத்மராஜாவுடைய கட்டுரையையும் உள்ளடக்கி கும்பாபிஷேக சிறப்பு மலரும் வெளியிடப்படுகிறது. இதேவேளை முன்னாள் விரிவுரையாளர் ப. கணேசலிங்கம், பேராசிரியர் விக்னேஸ்வரி பவநேசன் முதலியோர் ஆய்வு மற்றும் நினைவுப் பேருரைகளில் சடையம்மா பற்றி குறிப்பிட்டுள்ளமையும் நோக்கத்தக்கதே. இது தவிர மூதறிஞர் க.சி. குலரத்தினம் இவரது அற்புதங்கள் பற்றி சிறப்பையும் தாளையடி மு. சபாரத்தினம் என்பவர் பிள்ளைப்பேறு இல்லாதவர்களுக்கு இவர் வரமளித்து பிள்ளைப் பாக்கியம் கிடைத்தமையை வைத்து 'சடையம்மா" எனும் சிறுகதையை எழுதி இருப்பதும் நோக்குதற்குரியது.

19ஆம் நூற்றாண்டிலே ஒரு துணிச்சலான பெண் ஆளுமையாக ஈழம் மற்றும் பாரதம் ஆகிய இரு வேறு நாடுகளுக்கும் சென்று சமய, சமூகப் பணியை ஒரு பெண் தொடர்வது என்பது நினைத்துப் பார்க்கமுடியாத ஒன்று. அதனை நிதர்சனமாக்கி தனக்குக் கீழே ஒரு மடாதீனத்தையும் காரியக் கமிட்டியையும் நிறுவி பல்வேறு இடங்களிலும் நிறுவிய மடங்களை ஒருங்கிணைத்து பணியாற்றிய ஒரு பேராளுமையாக சித்துக்கள் கைவரப்பெற்ற பெண்ணாக ஆன்மீகப் பணி புரிந்தமை ஆய்வுப் புலத்திலே மதிப்பீடு செய்யப்படவேண்டிய ஒன்றாகும். ஈழத்துக்கும் நல்லூருக்கும் பெருமை சேர்ந்த ஒரு பெண்ணாக சைவத் தமிழ் உலகு ஏற்று அவரின் பணியை வெளிக்கொணர்ந்து அவர் வழி பயணிப்பது காலத்தின் தேவை எனலாம். ●

# கலச கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

அச்செழு வடக்கு அருள்மிகு வல்லியப்பர் சிவன் திருக்கோவில் புதிய உற்சவ மூர்த்தி பிரதிஷ்டை சிவசிறீ கிருஷ்ண ஜோதீஸ்வரக்குருக்கள் மற்றும் சிவசிறீ சிவசரவணபவ சிவமோகனக்குருக்கள் தலைமையில் நாளை 31 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.12 மணி தொடக்கம் 01. 42 மணி வரையான சுபமுகூர்த்த வேளையில் வசந்த மண்டப கலச கும்பாபிஷேகம் நடைபெற்று உற்சவ மூர்த்தி அபிஷேகம் நடைபெறவுள்ளது. பூஜைகளை தொடர்ந்து சுவாமி வீதி உலா நடைபெறவுள்ளது. (எ)

# மியன்மாரில்...

(13ம் பக்கத் தொடர்ச்சி)

மியான்மரில் 2021ஆம் ஆண்டு முதலே ராணுவம் ஆட்சி செய்து வருவதால், தகவல் பெறுவது கடினமாக இருக்கிறது. உள்ளூர் வானொலி, தொலைக்காட்சி, அச்சு மற்றும் ஆன்லைன் ஊடகங்களை அரசு கட்டுப்படுத்துகிறது. இணைய சேவை பயன்பாடும் கட்டுபாட்டுக்கு உட்பட்டது.

தொலைத்தொடர்பு வசதிகளும் துண்டிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. இயங்கும் உதவி முகமைகளை அணுகமுடியவில்லை.

தாய்லாந்து நிலநடுக்கம் ஏற்படும் பகுதியில் இல்லை என்பதுடன் அங்கு அபூர்வமாக உணரப்படும் அனைத்து நிலநடுக்கங்களும் அண்டை நாடான மியன்மாரில் ஏற்படுகின்றன.

பாங்காங்கில் உள்ள கட்டடங்கள் சக்திவாய்ந்த நிலநடுக்கங்களை தாங்ககூடியவகையில் வடிவமைக்கப்பட்டவை அல்ல என்பதால், கட்டமைப்புக்கு ஏற்படும் பாதிப்பு தீவிரமானதாக இருக்கலாம்.

நிலநடுக்கம் ஏற்பட்ட போதுதான் வீட்டில் சமைத்துக்கொண்டிந்ததாக பாங்காங்கில் வசிக்கும் ஊடகவியலாளர்கள் தெரிவித்தார்.

'நான் மிகவும் பதற்றத்தில் இருந்தேன், நான் அச்சமடைந்திருந்தேன்,' என்கிறார் அவர். 'அது என்னவென்றே எனக்கு தெரியவில்லை, ஏனென்றால், பாங்காங்கில் இது போன்ற ஒரு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டு பத்தாண்டுகளுக்கு மேல் இருக்கும் என நினைக்கிறேன்."

'எனது அபார்ட்மெண்டில் சுவர்களில் சில வெடிப்புகளை மட்டும் பார்த்தேன், நீச்சல் குளங்களிலிருந்து தண்ணீர் வெளியே தெளித்தது, மற்றும் மக்கள் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.

பின்னதிர்வு ஏற்பட்டவுடன் அவர் மேலும் பலருடன் சேர்ந்து தெருவுக்கு ஓடினர். 'என்ன நடந்தது என புரிந்துகொள்ள நாங்கள் முயன்றுகொண்டிருந்தோம்," என்கிறார் அவர்.

'பாங்காங்கில் உள்ள கட்டடங்கள் நிலநடுக்கத்தை எதிர்கொள்ளும்வகையில் கட்டமைக்கபடவில்லை, எனவே பெரிய அளவு சேதம் இருக்கப் போகிறது என நான் நினைக்கிறேன்.' (பிபிசி)

# உரிமை மீறல்கள், பொறுப்புக்கூறல் பிரச்சினைகளை மீண்டும்...

திணைக்களம் தடைகளை விதித்தது. அதன் பிரகாரம் அவரும் உடனடிக் குடும்ப உறுப்பினர்களும் அமெரிக்காவிற்குள் பிரவேசிக்க முடியாது.

அதே போன்றே முன்னாள் ஜனாதிபதிகளான சகோதரர்கள் மகிந்த ராஜபக்சவுக்கும் கோட்டாபய ராஜபக்சவுக்கும் 2023 ஜனவரி 10 ஆம் திகதி கனடா அதன் விசேட பொருளாதார நடவடிக்கைகள் சட்டத்தின் கீழ் தடைகளை விதித்தது.

தற்போது மூன்று இராணுவ தலைவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடைகளை ஆட்சேபித்திருக்கும் இலங்கை வெளியுறவு அமைச்சு வெளிநாடுகளினால் இவ்வாறாக ஒருதலைப்பட்சமாக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் இலங்கையில் முன்னெடுக்கப்படும் தேசிய நல்லிணக்கச் செயன்முறைகளுக்கு உதவப்போவதில்லை, மாறாக அந்த செயன்முறைகளை சிக்கலாக்கும் என்று கூறியிருக்கிறது. இது தொடர்பில் இலங்கையின் நிலைப்பாட்டை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பட்ரிக்கிடம் தெரியப்படுத்தியிருக்கிறார்.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான உள்நாட்டுப் பொறிமுறைகளை வலுப்படுத்தும் செயன்முறைகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என்றும் கடந்த காலத்தின் எந்தவொரு மனித உரிமைமீறலும் உள்நாட்டுப் பொறிமுறை மூலமாகவே கையாளப்பட வேண்டும் என்றும் ஹேரத் கூறியிருக்கிறார்.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான செயன்முறைகளைப் பொறுத்தவரை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நிலைப்பாடு முன்னைய அரசாங்கங்களின் நிலைப்பாடுகளில் இருந்து வேறுபட்டதாக அமையப் போவதில்லை. சில வாரங்களுக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் ஹேரத் இதை திட்டவட்டமாக அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் அரசியல் தலைவர்களுக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் வெளிநாடுகள் தடைகளை விதித்த முன்னைய சந்தர்ப்பங்களில் கிளம்பியதைப் போன்ற கண்டனங்கள் சிங்கள தேசியவாத சக்திகளிடமிருந்து தற்போதும் கிளம்பியிருக்கின்றன. பயங்கரவாதத்துக்கு எதிரான போரை முடிவுக்கு கொண்டுவந்த இலங்கையின் முன்னாள் இராணுவத் தலைவர்களை ஐக்கிய இராச்சியம் எவ்வாறு தண்டிக்க முடியும் என்று மகிந்த ராஜபக்ச கேள்வி எழுப்பியிருக்கிறார்.

வழமை போன்று விமல் வீரவன்ச, சரத் வீரசேகர, உதய கம்மன்பில போன்ற கடும்போக்கு சிங்கள தேசியவாத அரசியல்வாதிகள் பிரிட்டனை கடுமையாக கண்டனம் செய்திருக்கிறார்கள். மூன்று வருடங்களுக்கு முன்னரான மக்கள் கிளர்ச்சியையும் கடந்த வருடத்தைய தேசிய தேர்தல்களையும் அடுத்து பெரும் பின்னடைவைக் கண்ட தேசியவாத சக்திகள் மீண்டும் அரசியலில் தலையெடுப்பதற்கு இத்தகைய சந்தர்ப்பங்களை பயன்படுத்தும் என்பது தெரிந்ததே. முன்னாள் இராணுவத் தலைவர்களுக்கு எதிராக தடைகளை விதித்த பிரிட்டனை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடுமையாக கண்டனம் செய்யவில்லை என்று விமல் வீரவன்ச குற்றம் சாட்டியிருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் கூட அண்மைக்காலமாக சர்வதேச சமூகம் குறிப்பாக மேற்குலக நாடுகள் மனித உரிமைகள் விவகாரத்தில் இலங்கையுடன் பாரபட்சமான முறையில் நடந்துவருவதாக குற்றம் சாட்டிவருகிறார். மத்திய கிழக்கில் காசா போர் மற்றும் உக்ரெயின் போரைப் பொறுத்தவரை ஒரு விதமாகவும் இலங்கை விவகாரத்தில் வேறு வீதமாகவும் மேற்குலகம் இரட்டைத்தனமாக செயற்படுவதை [illegible]டும் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து இலங்கை வெளியேற வேண்டும் என்று வலியுறுத்துகிறார். டொனால்ட் ட்ரம்ப் மனித உரிமைகள் பேரவையில் இருந்து வெளியேற முடியுமானால் இலங்கையினால் ஏன் முடியாது என்று அவர் கேள்வியும் வேறு எழுப்புகிறார்.

அரசியல் தலைவர்களுக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் எதிராக வெளிநாடுகள் விதித்த முன்னைய தடைகளினால் இலங்கையை பொறுப்புக்கூற வைப்பதில் எந்தளவுக்கு நிர்ப்பந்திக்க முடிந்தது? என்ற ஒரு கேள்வி இருக்கிறது. தேசியவாத சக்திகள் மீண்டும் தலையெடுப்பதற்கான வாய்ப்புக்களை தோற்றுவிப்பதை தவிர இந்த தடைவிதிப்புகளினால் வேறு எதையும் உருப்படியாகச் செய்ய முடியாமலும் போகலாம். ஏனென்றால், இலங்கையில் எந்தவொரு அரசாங்கமும் உள்நாட்டுப் போரின்போது உரிமை மீறல்களில் ஈடுபட்ட படையினர் தண்டிக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. நெருக்குதல்கள் அதிகரிக்குமானால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் மேலும் தீவிரமான தேசியவாத நிலைப்பாட்டை நோக்கிச் செல்லக்கூடிய சாத்தியமே இருக்கிறது.

ஐக்கிய இராச்சியம் கடந்தவாரம் விதித்த தடைகளை தமிழ் அரசியல் கட்சிகள் வழமை போனறு வரவேற்றிருக்கின்றன. கடந்த பதினாறு வருடகால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறல் விவகாரங்களில் இலங்கை தமிழர்கள் நெடுகவும் கானல் நீரை விரட்டிக்கொண்டிருக்க வேண்டியதுதான் விதியோ என்ற கேள்வியைக் கேட்காமல் இருக்க முடியவில்லை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகத்தில்...

மோதி விபத்து சம்பவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த விபத்தில் மேலும் ஒரு நபர் சிக்கிய நிலையில் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

விபத்து சம்பவம் குறித்து விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

## உள்ளூராட்சி...

தெரிவிக்கையில்-

வாக்காளர்கள் இலகுவாக வாக்களிக்கக் கூடிய வகையிலேயே உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வாக்குசசீட்டு அமையும்.

இதேவேளை தேர்தல் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

மேலும், தமிழர் பகுதிகளில் மாத்திரமின்றி நாடு தழுவிய ரீதியில் பரவலாக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன - என்றார். (அ)

## வதைமுகாம்கள்...

செய்ய முடியும். காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட்டுள்ளன.

வடக்கின் கைத்தொழிற்சாலைகளை மீள இயங்கு நிலைக்கு கொண்டு வந்துள்ளோம்.

எமது அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தில் கூட முன்னைய அரசாங்கங்கள் ஒதுக்காத அளவு அதிக நிதியை நாம் வடக்குக்கு ஒதுக்கியுள்ளோம். ஆகவே சில நடைமுறைகளை பின்பற்றி தான் செய்யவேண்டும்.

அந்த நடைமுறைகளின் பிரகாரம் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர்.

பட்டலந்த போன்று பல வதை முகாம்கள் அந்தக் கலப்பகுதியில் இருந்துள்ளன. 1980 ஆம் ஆண்டு காலப் பகுதியல் படலந்த வதை முகாம் மாதிரி பல வதை முகாம்கள் இருந்தன. தெற்கில் ஜே.வி.பி., ஐ.தே.க. பிரிந்து இருந்தது போன்று, வடக்கில் புலிகள், ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப் என பிரிந்து செயற்பட்டு இருந்தார்கள். வதை முகாம்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் என எல்லோருமே பாதிக்கப்பட்டுள்ளார்கள். முதல் கட்டமாக எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் பட்டலந்த வதைமுகாம் விவாதம் ஆரம்பிக்கப்படும். எல்லாப் பிரச்னைகளையும் உடனடியாக விசாரிக்க முடியாது.

படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு இந்த நாட்டில் ஒரு நல்லிணக்கத்தை மீள கட்டியெழுப்ப வேண்டும்-என்றார். (அ)

## அரிசி...

தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருடம் பருவத்தில் 2.9 மில்லியன் மெற்றிக் தொன் நெல் அறுவடை எதிர்பார்க்கப்பட்டபோதிலும் 2.6 மில்லியன் மெற்றிக் தொன்னாக குறைவடைந்துள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

இத்தகைய சூழலில் நாட்டில் கீரிச் சம்பா மற்றும் சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோருக்கு தட்டுப்பாடு இல்லாமல் அரிசியை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நுகர்வோர் விவகார அதிகாரசபை நாடளாவிய ரீதியில் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றன.

அதன்படி அரிசி கையிருப்புக்களை பதுக்கி வைத்திருக்கும் மற்றும் கட்டுப்பாட்டு விலையைவிட அதிகமான விலையில் அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களை கண்டறிய இந்த சோதனை மேற்கொள்ளப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## மோடியின்...

முயற்சிகள் தொடர்பான உடன்படிக்கையும் இந்திய பிரதமரின் இலங்கை விஜயத்தின்போது கைச்சாத்தாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது இலங்கை விஜயத்தின்போது பாதுகாப்பு, வலுசக்தி, உட்கட்டமைப்பு உள்ளிட்ட துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டதாக ஹிந்துஸ்தான் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

## இலங்கையிலும்...

பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையிலும் சிறிய அளவிலான நிலநடுக்க நிகழ்வுகளின் பதிவு அண்மித்த காலப்பகுதியில் அதிகரித்து வருகின்றன. இலங்கையின் கீழாகவும் இலங்கைக்கு அண்மித்ததாகவும் சிறிய அளவிலான நிலநடுக்க நிகழ்வுகள் பதிவாகி வருகின்றன.

எனினும் இதுவரை இவை சேதங்களை ஏற்படுத்தவில்லை. ஆனால் என்றோ ஒருநாள் இலங்கையிலும் மிகப்பெரிய அளவிலான நிலநடுக்க நிகழ்வு இடம்பெறலாம். அதற்கேற்ற வகையில் போதுமான நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்கவேண்டும்.

ஜப்பான் போன்ற நாடுகளில் இதற்குரிய செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வெற்றியும் பெற்றுள்ளன. ஆகக்குறைந்தது புவிநடுக்கத்திற்குரிய விழிப்புணர்வு செயற்திட்டங்களை இலங்கையின் அனைத்து மக்கள் மத்தியிலும் முன்னெடுக்கவேண்டியது அவசியமாகும்.

இல்லையேல் 2004ஆம் ஆண்டின் சுனாமி அனர்த்தத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் இறந்தது போன்று ஒரு புவிநடுக்க அனர்த்தத்தினாலும் இலங்கையில் ஆயிரக்கணக்கானவர்களின் இறப்பை நாம் தவிர்க்க முடியாது என்பது உண்மை - என்றார் (அ)

## புதிய...

பிரிட்டன் அரசாங்கம் சார்பாக பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டேவிட் லெம்மி அறிவித்த தடைகள், இலங்கையில் தேசிய நல்லிணக்கச் செயற்பாட்டை குழப்புகிறது என இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் கூறுகிறார்.

பொறுப்பு கூற வேண்டியவர்கள் சட்ட விலக்கு பெற இடம் தர மாட்டோம் என்ற தமது தேர்தல் பிரசார வாக்குறுதிக்கு அமைவாக, பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டேவிட் லெம்மி, இலங்கையின் பிரஜைகள் நால்வருக்கு எதிராக அறிவித்த தடைகள் இலங்கையின் தேசிய நல்லிணக்க முயற்சிகளை குழப்புவதாக தனது "அங்கேயும் இல்லாத, இங்கேயும் இல்லாத" பதிலில் இலங்கை வெளிநாட்டமைச்சர் நண்பர் விஜித ஹேரத் கூறுகிறார்.

அமைச்சரே, உங்கள் தேர்தல் பிரசாரத்தின்போது நீங்கள் உறுதியளித்த, அரசியலமைப்பு செயற்பாடு, இன்று எங்கே? அதை உங்களை அரசு கால வரையின்றி ஒத்தி வைத்து விட்டது.

நல்லாட்சியில் 2018 ஆண்டளவில் இடைநிறுத்தப்பட்ட, புதிய அரசியலமைப்புச் செயற்பாட்டை நின்ற இடத்தில் இருந்து முன்னெடுப்போம் என்பது உங்கள் தேர்தல் கால வாக்குறுதி. ஜனாதிபதி அனுரகுமாரவுடன் அந்த புதிய அரசியலமைப்பு வழிகாட்டல் குழுவில் நான், நண்பர்கள் ரவுப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், சுமந்திரன் ஆகியோர் கூட்டாகச் செயற்பட்டோம்.

ஆகவே காலதாமதம் ஏற்பட முன், உடனடியாக புதிய அரசியலமைப்பு பணியினை ஆரம்பித்து தேசிய நல்லிணக்க இலக்கை அடையுங்கள். அதுதான் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு நீங்கள் தரக் கூடிய சரியான பதிலாக இருக்க முடியும் - என்றுள்ளது (அ)

# அநுர ஜனாதிபதியாகியும் அரச சேவை மாற்றமில்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 30

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்றும் அரச சேவையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஏனைய ஜனாதிபதிகள் எவ்வாறு அரசியல் நியமனங்களை வழங்கினரோ அதனையே தற்போதைய ஜனாதிபதியும் பின்பற்றுகின்றார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

தேர்தல் காலங்களில் முறைமை மாற்றம் தொடர்பிலும், அரச சேவையில் குடும்ப நியமனங்கள் தொடர்பிலும் தேசிய மக்கள் சக்தி பாரிய விமர்சனங்களை முன்வைத்தது.

தமது ஆட்சியில் தகுதிக்கு ஏற்ற நியமனங்களே வழங்கப்படும் என்றும் கூறினர். இவ்வாறு அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை அவர்களே மீறியுள்ளனர்.

தற்போதைய முக்கிய அரச பதவிகளில் ஆளுந்தரப்பினரின் உறவினர்கள் பலர் நியமிக்கப்பட்டுள்ளனர். அது மாத்திரமின்றி இராஜதந்திர நிமனங்களும் இவ்வாறே காணப்படுகின்றன.

கடந்த காலங்களில் தற்போதைய அரசாங்கத்தால் வெளிநாடுகளுக்கான பதவிகளுக்காக 14 நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த நியமனங்களில் ஒருவரைத் தவிர வேறு எவரும் தகுதிகளின் அடிப்படையில் நியமிக்கப்படவில்லை.

தேர்தல்களின்போது தேசிய மக்கள் சக்தியின் அரசியல் மேடைகளில் பிரசாரங்களை மேற்கொண்ட ஒருவர் வெளிநாடொன்றுக்கு தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான அரசியல் ரீதியான நியமனங்களாலேயே நாடு வீழ்ச்சியடைந்தது என்பதே தேசிய மக்கள் சக்தியின் வாதமாகக் காணப்பட்டது. ஆனால் அவர்களும் இன்று அதனையே செய்கின்றனர் - என்றார். (அ)

## புனர்வாழ்வு...

இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மினுவாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா கணேமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடையவரே உயிரிழந்தார்.

இளைஞனை தாக்கியதாலேயே மரணம் ஏற்பட்டதா என பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இளைஞரை அடித்து கைவிலங்கிடப்பட்டதாகவும், காலில் இரும்புச் சங்கிலிகள் போடப்பட்டதாகவும் கூறப்படும் சம்பவம் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த இளைஞனை மினுவாங்கொடை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது அவர் உயிரிழந்திருந்ததாக வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார். (அ)

## அநுரவின்...

போதியில் மத வழிபாடுகளில் ஈடுபடவுள்ளார். அதேவேளை இந்திய அரசின் நிதி உதவியுடன் இலங்கையில் செயல்படுத்தப்படவுள்ள பல திட்டங்களையும் பிரதமர் மோடி ஆரம்பித்து வைக்கவுள்ளார். குறிப்பாக இந்தப் பயணத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்தான பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் பரிமாறிக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய மாத்திரமின்றி, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதிநிதி களையும் பிரதமர் மோடி சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயத்தின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட "பகிரப் பட்ட எதிர்காலத்துக்கான கூட்டாண் மைகளை வளர்ப்பதற்கான" கூட்டுத் தொலைநோக்குப் பார்வையில் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒத்துழைப்புத் துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை பிரதமர் மோடி ஆய்வு செய்யவுள்ளமை விசேட அம்சமாகும்.

பிரதமர் நரேந்திர மோடி இறுதியாக 2019ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இந்தியாவும் இலங்கையும் வலுவான கலாச்சார மற்றும் வரலாற்று இணைப்புகளுடன் நாகரிக பிணைப்புகளைப் பகிர்ந்து கொள்கின்றன. அந்த வகையில் இந்த விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான வழக்கமான உயர் மட்ட ஈடுபாடுகளின் ஒரு பகுதியாகவும், மேலும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பன்முக கூட்டாண்மையை ஆழப்படுத்துவதில் மேலும் உத்வேகத்தை அளிக்கும் என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## பிரித்தானியா...

அதிகாரிகளுக்குத் தடை விதிக்கப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா மேலும் தெரிவிக்கையில்-

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான குழுக்கள் மீண்டும் தலைதூக்கியுள்ளன.

எமது நாட்டின் இராஜதந்திர செயல்முறையும், வெளிவிவகார அமைச்சின் பணிகளும் பலவீனமடைந்துள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சக்திகள் இதன் பின்னணியில் உள்ளன.

அல்ஜஸீரா தொலைக்காட்சி நிகழ்ச்சியினூடாக ரணில் விக்கிரமசிங்க மீது ஏதோ ஒரு வகையில் அழுத்தம் கொடுக்கவேண்டுமென்றே விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள் திட்டமிட்டுச் செயற்பட்டுள்ளனர்.

இதனை மீண்டும் எழுச்சி பெறச் செய்ய அவர்கள் செயற்படுகின்றார்கள். ஏனெனில் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

அதே போல யுத்தத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுகள் இடம்பெற்றதாகக் கூறும் விடயங்களை விற்பனை செய்து அதில் வாழும் விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள் சர்வதேசத்தில் இருக்கின்றனர்.

சிலர் ஈழத்தை அமைக்கும் நோக்கில் செயற்படுகின்றனர். மேலும் சிலர் தமிழ் மக்களின் பிரச்னைகளை விற்றுச் சாப்பிடுவதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். அவர்கள் கண்காணிக்கப்பட வேண்டிய குழுவினரே.

அவர்கள் சர்வதேச ரீதியில் உயர் பதவிகளை வகிக்கின்றனர்.

விசேடமாக ஐரோப்பா, கனடா ஆகிய நாடுகளில் உயர் பதவிகளை வகிக்கின்றனர்.

தற்போதைய அரசாங்கத்தின் அலட்சியமும், இராஜதந்திர விவகாரங் களில் திறமையின்மையும் இராணுவத்தினருக்கு எதிரான கடுமையான சூழ்நிலைக்கு வழிவகுத்துள்ளது. இது இன்னும் தீவிரமானதாகும் - என்றார்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## விளையாட்டுத்துறை அமைச்சர் நேற்று மன்னாருக்குப் பயணம்

மன்னார், மார்ச் 30

இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே நேற்று மன்னார் மாவட்டத்துக்கு விஜயம் செய்தார்.


மன்னார் மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளைச் சந்திக்கும் வகையிலும், விளையாட்டுத்துறை தொடர்பில் இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்வதற்காகவும் இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

மன்னார் பள்ளிமுனை விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கில் இடம்பெற்ற சந்திப்பில், மன்னார் மாவட்ட விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள், இளைஞர்கள், தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

இதன்போது நீண்ட காலமாக, கட்டுமான பணிகள் பூர்த்தி செய்யப்படாது காணப்படும், நறுவிலிக்குளம் சர்வதேச விளையாட்டு மைதானப் பணிகளை விரைவில் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்தார்.

அதேநேரம், நறுவிலிக்குளம் மைதானத்தின் தற்போதைய நிலை தொடர்பில் பார்வையிடுவதற்காக அமைச்சர் தலைமையிலான குழுவினர் கள விஜயம் மேற்கொண்டனர். (அ)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

### ஸ்கந்தானந்தா திபாகர்

தோற்றம் 22.05.1978

மறைவு 09.03.2025

தெல்லிப்பழை மகாதனையைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியாவை வாழ்விடமாகவும் கொண்ட ஸ்கந்தானந்தா திபாகர் எம்மை விட்டு பிரிந்த செய்தி எமக்கு பேரதிர்ச்சியும் கனத்த துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அவர் குடும்பத்தினருக்கும், நண்பர்கள், உறவினர்களுக்கும் இந்த இழப்பு சகித்துக்கொள்ள முடியாததொரு துயரம். அவரது பண்பு, கருணை, எளிமை, மற்றும் அன்பான சிந்தனைகள் அனைத்தும் எப்போதும் எமது நினைவில் நிலைத்து நிற்கும். அவரது குடும்பத்திற்கும் உறவினர்களுக்கும் இந்த துயர வேளையில் மனமாறாத ஆறுதல் அளிக்க இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

"அவனது ஆத்மா சிவசந்நிதியில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்."

- கமலகாசன் மகாலிங்கம்.

# இந்தியாவை உரியவகையில் அணுகி முல்லைத்தீவில் பண்பாட்டு நடுவம்!

### ரவிகரன் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 30

இலங்கை அரசாங்கம், இந்தியாவை உரிய முறையில் அணுகுவதன் மூலம் முல்லைத்தீவில் பண்பாட்டு நடுவம் ஒன்றை அமைப்பதற்கான நிதி உதவியை இந்தியாவிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் எனவும், கூட்டுறவுப் பிரதி அமைச்சரும், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்ற வேளை அவர் இவ்வாறு ஆலோசனை வழங்கினார்.

இதன்போது, முல்லைத்தீவு மாவட்டத்தில், பண்பாட்டு நடுவம் ஒன்றை அமைக்க வேண்டும் என, தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதுடன், இவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானத்தை, உரிய தரப்பினர்களுக்கு அனுப்பி வைப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டது. (அ)

# ஆனையிறவு உப்பின் பெயரை உறுதி செய்க!

### சிறீதரன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 30

ஆனையிறவு உப்பு என்னும் அடையாளப் பெயரை உறுதி செய்யுமாறு கோரி, பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்திக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

வடக்கு மாகாணத்தின் கைத்தொழிற் பொருளாதார அடையாளங்களுள் ஒன்றான ஆனையிறவு உப்பளத்தை மீள ஆரம்பித்தமை காலத்தேவையான செயற்பாடாகும். 1937ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஆனையிறவு உப்பளத்தில் 1938 ஆம் ஆண்டில் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் ஏறத்தாழ ஒன்பது தசாப்த பாரம்பரியம் மிக்க ஆனையிறவு உப்பளத்தின் செயற்பாடுகள் இன்றுமுதல் (29) மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளித்தாலும், 'ஆனையிறவு உப்பு' என்ற அடையாளப் பெயர் 'ரஜ லுணு' என மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கிடைக்கும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

வடக்கு மாகாணத்தின் கைத்தொழிற் பேட்டைகளுள் முதன்மையானதும், முக்கியத்துவம் மிக்கதுமான ஆனையிறவு உப்பளம் என்பது எமது மக்களின் அடிப்படை வாழ்வியலோடு இணைந்த ஓர் அடையாளம் ஆகும். அத்தகையதோர் கைத்தொழிற் கட்டமைப்பை மீள ஆரம்பிக்கும் போது அதன் அடிப்படை அடையாளத்தை மாற்றம் செய்கின்றமை தங்கள் அரசாங்கத்தின் மீதான அபிமானத்தையும், இன நல்லிணக்கம் குறித்த தங்களின் சிந்தனைப் போக்கையும் கேள்விக்குட்படுத்துவதாக அமைந்துள்ளது.

குறிப்பாக, கடந்த காலங்களில் இனத்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அடையாளத் திணிப்புகளைப் போலவே, எமது மொழியியல் அடையாளத்தை சிதைத்து, பெரும்பான்மையினத்தின் தனித்துவத்தை வலிந்து புகுத்தும் இன மேலாதிக்கச் செயற்பாடாகவே இதனையும் கருத வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

கடந்த 2025.03.18 ஆம் திகதி, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 22.7 இன் கீழ், ஆனையிறவு உப்பளம் குறித்து பாராளுமன்றில் நான் கேள்வி எழுப்பியபோது வலியுறுத்தியதற்கு அமைவாகவும், எமது மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்பவும் ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பினை 'ஆனையிறவு உப்பு' என்ற பாரம்பரிய பெயருடனேயே விற்பனை செய்வதை உறுதிசெய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (அ-5)

# உள்ளூராட்சி தேர்தலில் அமோக வெற்றி உறுதி!

### பொதுஜன பெரமுன நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 30

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெறுவோம். ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் பொய் மற்றும் போலியான வாக்குறுதிகளுக்கு நாட்டு மக்கள் இனி கவனம் செலுத்தமாட்டார்களென சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டுக்கு யார் சேவையாற்றியது?, யார் அரச சொத்துக்களுக்கு தீ வைத்தது? என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். மக்கள் விடுதலை முன்னணி மக்கள் மத்தியில் 75 ஆண்டுகால அரசாங்கம் மற்றும் அரசியல்வாதிகள் மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி தேர்தலில் வெற்றி பெற்றது.

மக்களுக்கு வழங்கிய போலியான வாக்குறுதிகள் இன்று அரசாங்கத்துக்கு எதிரானதாக திரும்பியுள்ளன. போலியான வாக்குறுதிகளால் தாம் ஏமாற்றமடைந்துள்ளதை மக்கள் தற்போது விளங்கிக் கொண்டுள்ளனர். வெறுப்பை முன்னிலைப்படுத்தி அதிகாரத்தை கைப்பற்ற முடியும். ஆனால், சிறந்த முறையில் முன்கொண்டு செல்ல முடியாது என்பதை அரசாங்கம் தற்போது அறிந்து கொண்டுள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சகல மாவட்டங்களிலும் போட்டியிடவுள்ளோம். 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றங்களில் அமோக வெற்றி பெற்றதைப் போன்று இம்முறையும் தேர்தலில் அமோக வெற்றி பெறுவோம். பெருமளவிலான உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றுவோம்.

ஜனாதிபதி அநுரகுமார போலியான குற்றச்சாட்டுக்களையும், வாக்குறுதிகளையும் தாராளமாக முன்வைப்பார். ஆனால், அவர் சிறந்த செயல்வீரரல்ல. அரச நிர்வாக கட்டமைப்பு குறித்து அவர் பலவிடயங்களை கற்றுக் கொள்ள வேண்டும்"- என்றார். (எ)

# தென்கிழக்கு பல்கலை. மாணவர்கள் போராட்டம்

கல்முனை, மார்ச் 30

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளரான மதுஷான் சந்திரஜித் உட்பட இருவரை விடுதலை செய்யுமாறு கோரி தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பல்கலைக்கழகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 27 ஆம் திகதி சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் 27 பேரை பொலிஸார் கைது செய்தனர். இவர்களில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளரான மதுஷான் சந்திரஜித் உட்பட இருவரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாவத்தை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தது. 25 பேரை பிணையில் விடுவிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், தென்கிழக்கு பல்கலைக் கழகத்துக்கு முன்பாக கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியில் கூடி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org